"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால்
அதைக் காக்கிறவன் கண்விழிப்பதுவியர்த்தம்"

# காவலன்

தந்தி: "கதலிக்பிறன்" யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 300.
Registered at the Ceylon G. P. O. as a Newspaper

93-ம் புத். | யாழ்ப்பாணம், 1968-ம் ஞு பங்குனிமீ 2-ந்வ சனிக்கிழமை — பிரதி சதம் 15 | 9-ம் இல.

## கருதினல் லெர்காரோ

76 ஆண்டு பூர்த்தியான கருதினல் லெர்காரோ பொலொக்ஞே பிரதேச அதிமேற்றிராணியார் பதவியிலிருந்து சுகயீனத்தின் காரணமாக நீங்கிக்கொள்ள பரிசுத்த பாப்பரசருக்குச் செய்த விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. சென்றவாரம் அதே காரணத்துக்காக, திருவழிபாட்டு ஆராய்ச்சிக்குழுவின் தலைமையிலிருந்தும் அவர் நீங்கிக்கொண்டார். திருவழிபாட்டுத் திருத்தங்கள் யாவும் இவரது தலைமையின் கீழே அண்மையில் நடைபெற்றது, இத்தாலி தேசத்திலேயுள்ள கத்தோலிக்கரிற் பெரும்பாலார் பழைய முறையிலேயே திருவழிபாட்டு முறைகளை நடத்த விருப்பமுள்ளவர். எனினும் அதைப் பொருட்படுத்தாது, வத்திக்கான சங்க முடிவுகளை அமுல்செய்வதிலேயே தமது முழுக்கவனத்தையும் செலுத்திவந்த கருதினல், இத்தாலியிலும் அகில உலகத்திலும் திருவழிபாட்டு முறைகளை விசேஷமாய்த் திருப்பலிச் செபங்களை சுயபாஷைகளில் ஆக்கிவிட்டது யாவரும் அறிந்ததே.

## அநாதை மேற்றிராசனம்

பெறுவியா தேசத்தில் குருமார் குறைவினுல் ஏற்பட்டிருக்கும் நெருக்கடியைநீக்க இங்கிலாந்துதேச லீட்ஸ் பிரிவு மேற்றிராணியாராகிய வீவர் அடிகளார் முன்வந்திருக்கின்றுர். பெறூவியாவுக்கு லீட்ஸ் மேற்றிராசனத்திலிருந்து குருமாரை அனுப்பிவர அவர் சம்மதித்துள்ளார். தற்போது அம்முறை எவ்வாறு நடந்து வருகின்றதென நேரில் பார்த்துவர விலர் அடிகளார் பெறூவியாவுக்கு விஜயம் செய்திருக்கின்றுர். லீட்ஸ் மேற்றிராசனத்திலிருந்து வந்த ஆங்கில குருமார் அத்தேச மக்களின் இகபர குறைகளை அகற்றுவதில் தீவிரவேலை செய்துவருவதைக் கண்டு அவர் மிகத் திருப்திகொண்டிருக்கிறுர் எனக் கூறப்படுகிறது.

### செக்கோசிலாவாக்கியாவில் குருக்களின் சேவையை

## அழிப்பது நோக்கமா?

கொமியூனிஸ்த ஆட்சி நடைபெற்று வருகின்ற செக்கோசிலாவாக்கியாவில் குருமாரின் சேவையை ஒளித்துக்கட்டுவது நோக்கமாக அரசாங்கம் மறைமுகமாக வேலைசெய்து வருகின்றது. சில வருடகாலத்துக்கு முன் வருடாவருடம் 400 குருமார் அபிஷேகம் செய்யப்பட்ட தேசத்தில் சென்றவருடம் 26 மாணவர்களே அரசாங்கத்தால் அனுமதிக்கப்பட்டார்கள். கொமியூனிஸ்த ஆட்சி ஏற்படுமுன் பல இடங்களில் குருமார் பயிற்றப்பட்டனர். ஆனல் இப்போது ஒரு குருமாணவ சாலையை நடத்தவே அனுமதியுண்டு. குருமாரின் தொகையைக் குறைப்பதால் விசுவாசத்தை அழிப்பது அவ்வரசாங்கத்தின் குறிக்கோளாய் இருப்பதுபோலத் தோற்றுகின்றது.

### கத்தோலிக்க கல்வி மகாசபையினர்

## கொழும்பில்கூடி ஆலோசனைகள்

மாசிமாதம் 19-ம், 20-ம் திகதிகளில் கத்தோலிக்க கல்வி மகாசபையின் அழைப்பின்மேல் இலங்கைக் கத்தோலிக்க கல்விஉலகில் சேவை செய்துவரும் அறிஞர்களும் அதில் ஆவர்வமுள்ளவர் பலரும் கொழும்பு சென் பிறிஜட்ஸ் மடக் கல்லூரியில் ஒன்றுகூடி வத்திக்கான் சங்கத்தில் மிகச்சிரமத்துடன் விளக்கப்பட்ட "மனிதாபிமான மதிப்புகளை"ப் பற்றி அலசி ஆராய்ந்தனர். இந்த ஆலோசனைகளில் சர்வகலாசாலைகளின் பேராசிரியர் பலரும், கத்தோலிக்க கல்லூரி அதிபர்களும் மிக ஆர்வத்துடன் தமது யோசனைகளை விளக்கினர். மக்களின் கல்வி பூரண தன்மை உடையதாக இருக்கவேண்டுமென்றும், சீவியத்தின் காலஎல்லை முழுவதும் கல்விக்காலமாய் இருக்க வேண்டுமென்றும், விளக்கப்பட்டது. கட்டாயக்கல்விக்கு 5 தொடக்கம் 16 ஆண்டு எல்லை வரையப்பட்டதாயினும், சீவியகாலம் முழுவதும் கல்விக்காலமாக இருக்கச் சபையினர் உதவவேண்டுமெனக் கோரப்பட்டது.

### 200 மேற்றிராணிமார் பொகோடாவில்

## கூடுவார்கள்

இவ்வருடம் தென் அமெரிக்காவில் கொலம்பியா தேசத்தில், பொகோட்டா நகரில் 39-வது சர்வதேச சற்பிரசாத மகாநாடு நடைபெற இருக்கிறது. அத்தருணம் அங்கு பரிசுத்த தந்தை 6-வது சின்னப்ப பாப்பரசரும் சமுகம் அளிப்பாரென எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும் சுமார் 200 மேற்றிராணிமார் இம் மகாநாட்டில் பங்குபெற ஆயத்தங்கள் செய்யப்படுகின்றன.

## பாஷைப்போர் வேண்டாம்

பெல்ஜியதேசத்தில், பிளெமிங்ஸ்பாஷை பேசுவோருக்கும், பிரான்சுப்பாஷை பேசுவோருக்கும் என்றுமுள்ள மனக்கசப்பு சிலவாரங்களின்முன் எல்லைமீறிவிட்டதால் நாட்டில் பெரும் கவலைக்கு இடம் அளித்துவிட்டது. ஆகவே பெல்ஜியதேச கருதினலாகிய சுயெனஸ் அடிகளார் தம் நாட்டுக் கத்தோலிக்க மக்களுக்கு நற்புத்திமதி புகட்டிவருகின்றுர். "பாஷையிலும்பார்க்க ஒருதேச மக்கள் மதிக்கக்கூடிய உடமைகளுமுண்டு. ஒருதேச மக்களுடைய சகோதரத்துவத்தைப் பாதிக்கக்கூடிய எவற்றையும் நாம் தவிர்க்க வேண்டும்" என்பதே அப்புத்திமதி. அத்தேசத்தில் பாஷைப் போரில் ஈடுபட்டுள்ள மாணவர் கல்லூரிகளையும் சர்வகலாசாலைகளையும் பலநாட்களாகப் பகிஷ்கரித்து வந்தனர். கருதினல் சுவென்சின் புத்தி போதனையினுல் நிலைமை சாதாரணமாகிவருகின்றது.

## பரீஸ்நகர கருதினலின் மரணம்

55 ஆண்டுகள் நிறைவுற்றவரும், பரிஸ்நகர அதிமேற்றிராணியாருமான கருதினல் வியூலோ சென்றவாரம் பரிஸ்நகரில் காலமானுர். சென்றவருடம் கார்த்திகைமாதம் பிரான்சுதேச மேற்றிராணிமார் லூர்துகெபியில் ஆலோசனைக்குக் கூடியிருந்தசமையம் கருதினலுக்கு திடீர் சுகயீனம் ஏற்பட்டு, ஜனுதிபதி டிகோல் அவர்களின் சொந்த விமானத்தில் பரீஸ் வைத்திய சாலைக்குக் கொண்டுவரப்பட்டு மூன்றுமாதகாலம் கான்சர் நோயினுல் வருந்தி கருதினல் மரணமானுர். பரீஸ் பிரதேசத்துக்கு அதிமேற்றிராணியாராக சென்றவருடமேயே நியமனம் பெற்றவர். எமது பாப்பரசர் வத்திக்கானில் உதவி வெளிவிவகார காரியதரிசியாகக் கடமையாற்றி வந்த காலத்தில் வியூலோ அடிகளார் இவருக்கு உதவியாளராகவும் நெருங்கிய நண்பராகவும் விளங்கினுர்.

## பாப்பரசர் சமுகமளிப்பாரா?

கொங்கிறிகேஷனல் புரெட்டஸ்தாந்தசபையில் முதன்மைவாய்ந்த ஒருவரும், கிறிஸ்தவ ஐக்கியத்திற்காக மிகவும்உரமாக வாதாடிவருகிறவருமான டக்றர் செசில் நோர்த் கொட் அவர்கள் அன்றுபேசியபோது, இவ்வருடம் ஆடிமாதத்தில் சுவீடன்தேச உப்சலாநகரில் நிகழவிருக்கின்ற கிறிஸ்தவசபைகளின் உலக சங்க மகாநாட்டிற்குச் சின்னப்ப பாப்பரசர் விஜயஞ் செய்வாரெனக் கூறி நம்பிக்கை தெரிவித்திருக்கின்றுர்: கத்தோலிக்கருக்கும், புரொட்டஸ்தாந்தருக்குமிடையிலுள்ள உறவுகள்பற்றிச் 'சேர்ச் ரைம்ஸ்' என்ற சஞ்சிகைக்கு இவர் எழுதியுள்ள ஒரு கட்டுரையிலே "உப்சலாவில் பாப்பரசரின் பிரசன்னமான து ரேமான் கத்தோலிக்கம்அல்லாத உலகமுழுவதற்கும் ஆழ்ந்த அர்த்தமுள்ள ஒரு உபசாரமாயிருக்கும்" எனத் தெரிவித்திருக்கின்றுர்.

### அத்திலாந்து ஒப்பந்த தேசத்தவர்களுக்கு

## பாப்பரசரின் உபதேசம்

அத்திலாந்து ஒப்பந்த தேசத்தவர்களின் இராணுவ கல்லூரி ஆசிரியர்களும் மாணவர்களும் அடங்கிய ஒரு கோஷ்டியொன்று வத்திக்கானுக்குச் சென்று பரிசுத்த பாப்பரசர் 6-வது சின்னப்பரைப் பேட்டி கண்டபோது அவர்களை மிகப்பரிவுடன் பரிசுத்ததந்தை வரவேற்று சமாதான சிற்பிகளாக விளங்க விண்ணப்பித்துக் கொண்டார். சமாதானத்தை உலகில் நிலைநாட்டத் தாம் அண்மையில் எடுத்துக்கொண்ட பிரயத்தனங்களை விளக்கினுர். அத்துடன் உலக சமாதானம் குலைய இருக்கும் இன்றைய நிலையைப் பரிசுத்த தந்தை துக்கத்தோடு சுட்டிக்காட்டி மக்களின் மன்றுட்டுக்களும் அயராவிழிப்பும் சமாதானத்துக்கு அவசியம் எனக் கூறினுர்.

### இலங்கைப் பெண்மணிக்கு வத்திக்கான்

## ஆலோசகர் பதவி

2-ம் வத்திக்கான் சங்க முடிவுகளின்படி வத்திக்கான் நிர்வாகத்தில் இல்லறக் கத்தோலிக்கருக்கும் தக்கஇடம் அளிக்கிற நோக்கத்துடன் பரிசுத்ததந்தை 6-வது சின்னப்பர் முன்னுள் வேதபோதக சபையென அழைக்கப்பட்டு வந்த அம்மகாசபையில் முதன் முதலாக இல்லற கத்தோலிக்கர்களை ஆலோசகர்களாக நியமித்திருக்கிறுர். இவர்களுள் மூவர் பெண்மணிகள். இப்பெண்மணிகளுள் ஒருவர் எமது இலங்கைக்குச் சொந்தமானவர். இவர் செல்வி ஜனித்தா பெரேரா அவர்களே. இவர் சர்வதேச கிறீஸ்தவ தொழிலாளர் இயக்கத்தின் உபதலைவர்களில் ஒருவராகப் பலகாலம் சேவைசெய்து வந்திருக்கிறுர். மறு இருபெண்மணிகள் செல்வி கில்டிஸ் பலந்தலி, செல்வி கொப்பீறே என்பவர்களே. முன்னவர் தென் அமெரிக்க உறுகுவே தேசத்தவரும் பின்னவர் பெல்ஜிய தேசத்தவருமாம். இச்சபையின் ஆலோசகர்களாக 36 பேர்களை பாப்பரசர் நியமித்திருக்கிறுர்.

### கொழும்பு - வெள்ளவத்தையில்

## கத்தோலிக்கரின் ஆரவாரம்

சென்ற பல வருடங்களாக கொழும்புநகரில் வெள்ளவத்தை விசாரணைப்பங்கில் அதிபர் சுவாமியாரும் ஆர்வமுள்ள கத்தோலிக்க பிரமுகர் தொழிலாளர் பலரும் ஒன்றுசேர்ந்து படாதபாடுபட்டு ஒத்துழைத்து வந்ததன் பயனுக நகருக்கே ஒரு அலங்காரமாக விளங்கும் ஒரு சிறந்த தேவாலயம் கட்டி எழுப்பப்பட்டுவிட்டது. இதை ஆடம்பரமாக நமது கருதினல் ஆண்டவர் கூறே அடிகளார் பங்குனிமாசம் 6-ம் திகதி அபிஷேகம்செய்து வைப்பார். நகர பாதுகாவலராக சரித்திரம் கூறும் அர்ச்சியசிஷ்ட லோறன்சின் பெயர்கொண்டுவிளங்கும் இத்தேவாலயத்தினதும், இவ்விசாரணைப்பங்கினதும் சரித்தரம் அடங்கிய ஒரு சிறு புத்தகம் அன்றுதினம் விற்பனைக்கு இருக்கின்றது. பங்குனிமாதம் 6-ம் திகதி அபிஷேகச்சடங்குக்குமுன் செய்யவேண்டிய ஆயத்தங்களிலும் அலங்காரங்களிலும் வெள்ளவத்தை கத்தோலிக்கர் தமது கவனத்தைச் செலுத்திவருகின்றனர்.

### கத்தோலிக்க வைத்திய கல்லூரியின்

## மகத்தான சித்தி

இந்தியாவில் பங்களூரில் சிலகாலத்தின்முன் நிலைநாட்டப்பட்ட புனித அருளப்பா வைத்தியகல்லூரிக்கு அந்நாட்டில் சென்றவருடம் நடந்த "M. B. B. S." என்னும் உயர்தர வைத்தியர் பரீட்சையில் எய்தியிருக்கும் சித்தி இந்தியநாட்டில் பெரும் கீர்த்தியை அளித்திருக்கின்றது. கீர்த்தியுடன் சித்திபெற்ற முதல் இருமாணவர்களும் இக் கல்லூரி மாணவர்களாம். இச்சித்திகளைவிட மறுபிரிவுகளிலும் திறமையுடன் சித்திபெற்ற மாணவர்களின் தொகை பிற கல்லூரிகளிலும் அதிகமாகவே இருக்கின்றது.

"மரியாளின் திருக்கரத்தின் வழியாக அன்றி வேறு முறையில் நமக்கு எதுவும் கிடைக்கக்கூடாது என்பது இறைவன் திருவுள்ளம்."

— புனித பெர்னர்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினசரி பூசை வழிகாட்டி

**பங்குனி மாதம்**

| | | | |
|---|---|---|---|
| 3 | ஞா. | தவக்கால 1-ம் ஞாயிறு | [ஊ] |
| 4 | தி. | கிழமைப்பூசை | [ஊ] |
| 5 | செ. | ,, | [ஊ] |
| 6 | பு. | தவக்கால நோன்புப் புத. | [ஊ] |
| 7 | வி. | கிழமைப்பூசை | [ஊ] |
| 8 | வெ. | தவக். நோன்பு வெள்ளி | [ஊ] |
| 9 | ச. | தவக்கால நோன்பு சனி | [ஊ] |


சத்தியவேத
பாதுகாவலன்

1968-ம்வரு மீ பங்குனி 2-ந்உ


## சிலுவை காட்டும் வழி

கஷ்ட துன்பங்களிலிருந்து பின்வாங்குவதுதான் மனித இயல்பு. ஆனால் ஒரு கிறிஸ்தவன் அவ்வாறு பின்வாங்குவது முறையாகுமா? சிலுவையும் கல்வாரிமலையும் தெட்டத்தெளிவாகக கற்பித்த உண்மையின் மட்டில் ஒரு கிறிஸ்தவன் பராமுகமாய் இருக்க முடியுமா? தபசுகாலத்தை கிறிஸ்துநாதரின் பாடுகளிலிருந்து பிரித்துவிட ஒரு கிறிஸ்தவனால் எங்ஙனம் முடியும்? இன்றைய மனிதன் தனது உடல் வருத்தத்தையும் பாடுகளையும் குறைப்பதற்கு எண்ணற்ற உபகரணங்களை உற்பத்தி செய்து வருகிறான். ஆனால் சிலுவையின் வழியைத் தவிர வேறெந்த வழியிலும் அவன் இறைவனை அடையப் போவதில்லை, அன்பின் இறைவனை அடைய வேண்டுமானால் கல்வாரி மலைச் சாரலில் ஏறியே ஆகவேண்டும்.

விபூதித் திருநாளன்று, எமது நெற்றியில் விபூதி பூசப்பட்ட வேளையிலிருந்து தபசுகாலத்தின் அர்த்தத்தை நாம் முழுமையாக விளங்கிக்கொள்ள முயலவேண்டும். எமக்கு மீட்பைக்கொண்டு வந்த சிலுவையை எமது வாழ்க்கையிலும் இடம் பெறச் செய்ய வேண்டும்.

தபசுகாலம் அன்புக்குரிய காலம். மனிதன் மீதுள்ள அன்பின் காரணத்தால் இறைவனே முன்வந்து அவனை மீட்டார். இதை அர்ச். சின்னப்பர் வலியுறுத்துகிறார்.

முக்கியமாகத் தபசுகாலத்தில் பாவத்தின் கனகனத்தைப்பற்றிப் பூரணமாக விளங்கிக் கொள்வது அவசியம். பாவமே கிறிஸ்துநாதரின் பாடுகளுக்கும் மரணத்துக்கும் காரணமாயிற்று. பாவத்தின் கொடுமையைப்பற்றி எவ்வளவு அதிகமாக உணருகிறோமோ, அவ்வளவுக்கவ்வளவு ஆண்டவரின் பாடுகளையும் ஆழ்ந்து உணர வல்லவர்களாயிருப்போம்.

பாவத்தின் தன்மை சரிவர உணரப்பட்டதும், அதற்குப் பரிகாரம் செய்யவேண்டியதன் அவசியமும் விளங்கும். இதுவே தபசுகாலத்தில் எமது முக்கிய குறிக்கோளாகும்.

# ஏன் சாம்பலாய்ப் போவான்?

— பி. ஜே. அமிர்தநாயகம் —

கிறீஸ்து நமது உள்ளங்களில் வரவேண்டுமானால் கிறீஸ்துவின் முன்னோடியாகிய புனித ஸ்நாபக அருளப்பர் படிப்பித்ததுபோல் தவத்தை நாம் செய்யவேண்டும். ஏனெனில், தவமின்றி இரட்சணியமில்லை; தவமின்றி எல்லோரும் அழிந்தேபோவோம். நித்திய சீவியமாகிய கிறீஸ்து எங்களில் வாசஞ்செய்ய மாட்டார். எனவே நமது மாதாவாகிய திருச்சபை நித்திய சீவியத்தை எல்லோரும் பெற்றுக்கொள்ளும் படியாகக் கிறீஸ்துவ வழிபாட்டில் ஒருமுக்கிய காலமான தபசுகாலத்தை விபூதிஎன்னும் சாம்பருடன் ஆரம்பிக்கிறது. எப்படி ஒருவிதை மண்ணில் விழுந்து அழிந்துபோய்ப் பலன் தருகிறதோ அதேபோல் மனிதனாய்ப்பிறந்த எவனும் தன்னில் பழைய ஆதாமை அழித்துப் புதிய ஆதாமாகிய கிறீஸ்துவை உயிர்ப்பிக்க வேணும்.

### கிறீஸ்துவைத் தரித்துக்கொள்ளுங்கள்

புனிதபவுல் ஆதிக்கிறீஸ்துவர்களுக்குக் கிறீஸ்துவின் அளவில்லாத செல்வத்தை அளித்தபோது சொல்லுவதாவது: "நீங்கள் சிலுவையில் அறையுண்ட கிறீஸ்துவைத் தரித்துக் கொள்ளுங்கள்." ஆம் புனிதத் தன்மை அடைய வேண்டுமானால் பழையதை ஒழிக்கவே வேண்டும். புதிய ஆதாமாகிய கிறீஸ்துவோடு ஐக்கியப்பட வேண்டுமானால் பழைய ஆதாமாகிய பாவப் பழக்கங்களை விட்டுவிட வேண்டும். கிறீஸ்துவே இந்த நிபந்தனையைத் தமது சீடராகவா விரும்புவோருக்கு உறுதியாகக் கூறுகிறார். "நீ என்பின்னே வரவிரும்பினால் உன் சிலுவையைத் தூக்கிக்கொண்டு வா." ஆம், கிறீஸ்து வேண்டுமானால் கிறீஸ்துவின் சிலுவையும் அத்தியாவசியம். சிலுவையின்றி இரட்சணியமில்லை. தவமே கிறீஸ்துவின் சிலுவை.

### ஆண்டவர் உங்களோடு இருப்பாராக

நாம் நாளாந்தம் பூசைப்பலியில் பங்குபற்றி கிறீஸ்துவையும், அவருடைய சிலுவையையும் தரித்துக் கொள்வோமாக. பூசைப்பலி ஒப்புக் கொடுக்கும் குருவானவர் இவ்வுன்னத செல்வத்தைப் பூசையில் திரும்பத்திரும்ப எங்களுக்கு விரும்புகிறார். அத்தற்காகவே பிரார்த்திக்கிறார். பின் கிறீஸ்தவர்களைப் பார்த்து அநேகம் முறைகளில் "ஆண்டவர் உங்களோடு இருப்பாராக" என்ற உன்னத ஆசியைக் கூறுகிறார். கிறீஸ்தவர்களும் அவ்வாசியையே குருவானவருக்கு விரும்புகிறார்கள். "உம்மோடும் இருப்பாராக." இதன் அர்த்தம் என்ன? புனிதர் பவுல் சொன்னதுபோல் "சிலுவையில் பலியான கிறீஸ்துவைத் தரித்துக்கொள்ளுங்கள்" என்பதாம்.

### புனிதர்களில் பக்தி

புனித அந்தோனியாரிலும், புனித தெரேசம்மாவிலும் நாம்பக்தியுள்ளவர்களென்பதன் அர்த்தமென்ன? அவர்கள் தங்கள்மேல் தரித்துக் கொண்ட யேசுவில் நாமும் பக்தியென்பதாம். அவராலேயே அவர்களின் புனிதத்தன்மையை அவர்கள் பெறுகிறார்கள். கிறிஸ்துவின் தவமே, அவரின் சிலுவையே அவர்களுக்கு அவரின் அன்பையும் அளித்து அவரால் வல்லமையையும் அளிக்கிறது. எனவே, கிறிஸ்துவிடம் புனிதர்கள் வல்லபமுள்ளவர்களாயிருந்து எங்களுக்கு வேண்டுதல் செய்கிறார்கள். இதுவே உண்மையான புனிதர்கள் வணக்கம். இதேபோல் திருச்சபையின் மூலக்கல்லாய் தெரியப்பட்டவராகிய பேதுருவும் அப்போஸ்தலர்களில் மிகவும் சிறந்தவரான பவுலும் தங்கள் [illegible] சிலுவையும், வாளுமே அவர்களின் உன்னத தவம். தவமே அன்பர்களை உன்னத அன்பராகிய யேசுவுடன் ஐக்கியப்படுத்தும்.

**தீர்மானம்:**

1. நாங்கள் இந்த நாற்பது நாட்களும் நாளாந்த பூசைப்பலியில் பங்குபற்றுவோம்.

2. நாளாந்தம் சீவியமாகிய கிறீஸ்துவைத் திவ்வியநற்கருணையில் பெறுவோம்.

3. கிறீஸ்து தம்மை நமக்கு அளிக்க எடுத்த இரட்சணிய கருவியாகிய சிலுவைப்பாதையை வழிபடுவோம்.

4. கிறீஸ்துவோடு அப்பாதையில் மிகவும் உருக்கமாய் பின்சென்று எங்கள் இரட்சணிய வேலையைத் தேடின தேவதாய்க்கு ஆறுதல் சொல்வோம்,

5. கிறீஸ்துவினதும், தேவதாயாரினதும் அன்பின் நன்றிக்காக எங்கள் நாளாந்த கடமைகளைத் தாராளமனத்துடன் செய்வோம்.

6. எங்கள் வீடுகளிலே இருக்கும் எல்லோரிலும் கிறீஸ்து அரசாள விரும்பி எல்லோரும் ஒன்றுகூடி வியாகுல காரணிக்கங்களைத் தியானித்துச் செபமாலையை நாளாந்தம் சொல்லுவோமாக.

# முத்திரைகள்

**பாவிக்கப்பட்ட முத்திரைகளை எறிய வேண்டாம். அவைகள் பசியால் வாடுகிறவர்களுக்கு உணவையும், வீடில்லாதவர்களுக்கு இல்லத்தையும், துன்பப்படுவோருக்கு தேற்றுதலையும் கொடுத்துதவ முடியும், ஆத்துமங்களையும் காப்பாற்ற உதவும்.**

### எங்களுக்கு உதவிசெய்ய முன்வரமாட்டீரோ?

காகித உறையிலிருந்து முத்திரைகளை கழற்றவேண்டாம். முத்திரையைச் சுற்றி சிறிய ஓரம் வைத்து வெட்டியெடுக்கவும். பெரிய தொகை சேருமட்டும் காத்திருக்க வேண்டியதில்லை. பெரிய தொகை அனுப்பினாலும் சிறிய தொகை அனுப்பினாலும் தபால் செலவில் பெரிய வித்தியாசம் இருக்கமாட்டாது.

காகித உறையிலே, அல்லது சீலை உறையிலே முத்திரைகளைப் போட்டு, ஒட்டி அல்லது கட்டிப்போடவும். அவ்வுறையின் வெளிப்புறத்தில் "பாவித்த முத்திரைகள்" என்று குறிக்கவும். அவ்வுறையை கனத்த காகித உறையொன்றில் போட்டுக் கட்டவும், ஒட்டவேண்டாம். திறந்து சோதிக்கக் கூடியதாயிருக்கவேண்டும். இவ்வுறையின் வெளிப்புறத்தில் "அச்சிடப்பட்டவை" அல்லது "பார்சல் தபால்" என்று எழுதவும்.

முத்திரைகளின் தொகை எவ்வளவு சிறிதாயினும், அனுப்பியவை கிடைத்ததென்று அறிவிக்க ஆசிக்கிறோம்.

**முத்திரைகளையும் கடிதங்களையும் மேல்வரும் விலாசத்துக்கு அனுப்புங்கள்**

தேசீயத் தலைவர்,
பாப்பரசரின் வேதப்பரப்புதல் உதவிச் சபைகள்,
அதிமேற்றிராணியார் இல்லம்,
கொழும்பு—8.

● "சிகறெற் புகைப்பது உடல் நலத்துக்கு ஆபத்து விளைவிப்பதென்று சொல்வதிலும்பார்க்க அதைப் புகைப்பது சவப்பெட்டிகளை உருவாக்குவதற்கொப்பாகுமெனக் கூறுவதே அதிகம் பொருத்தமானது" என்று பிரபல இருதய வைத்திய நிபுணரான டக்றர் லூயி என் காட்ஸ் தெரிவிக்கின்றார்.

● ஈறுனென இப்பொழுது அழைக்கப்படுகின்ற பார்சீகநாட்டின் ஷாமன்னர் 1963ஆம்ஆண்டு தமதுநாட்டிலே கல்விப்பயிற்சிப்படை ஒன்றைத் திரட்டினார். இந்தப்படையைச் சேர்ந்த 40,000பேரும் புத்தகமும் கையுமாக நாடுமுழுவதும்சென்று 3,400வகுப்புகளைத் தொடக்கிநடத்திக் கல்வியறிவு இல்லாதிருந்த வளர்ந்தவர்களான இரண்டரைலட்சப் ஈறுனியர்களுக்குக் கல்வியறிவூட்டியிருக்கின்றார்கள்.

● "சிகறெற் புகைப்பதால் மாரடைப்பு, பக்கவாதம், நுரை ஈரலில் புற்றுநோய் ஆகியன உண்டாகின்றன; மதுபானம் அருந்துவதைக்காட்டிலும் சிகறெற் புகைப்பது மிகவும் ஆபத்தான"தென்று இருதய நோய்கள் பற்றிய ஆராய்ச்சியாளரும், சிக்காகோ நகரிலுள்ள பிரபல இருதய ஆஸ்பத்திரியில் கடமையாற்றுகிறவருமான டக்றர் லூயி என் காட்ஸ் கூறுகிறார்.

● சென்னையிலே மிருகவதைத் தடுப்புச்சங்கம் நாய்களுக்கென்று அழகான ஒரு மண்டபத்தைத் திறந்திருக்கிறது. இதிலே நாய்களின் சொந்தக்காரர் தங்கள் செல்லநாய்களின் நகங்களை வெட்டுவிக்கலாம். செவிகளைத் துப்பரவு செய்விக்கலாம். அவற்றின் ஒட்டுண்ணிகளை அகற்றுவிக்கலாம். மயிர்களைக் கத்தரித்துச் சீவுவிக்கலாம்.

● அமெரிக்க தேயிலைச் சங்கம் 1950-ம் ஆண்டு ஆக்கப்பட்டபின் கடந்த 17 ஆண்டுகளிலும் அமெரிக்க மக்களின் இல்லங்களில் தேயிலைப் பாவனை 56 சத விகிதம் அதிகரித்துள்ளது. சென்ற 1967-ம் ஆண்டிலே ஐக்கிய அமெரிக்கதேசம் 14 கோடியே 9 லட்சத்து 47 ஆயிரம் ரூத்தல் தேயிலையை இறக்குமதி செய்திருக்கிறது. இத்தொகை முந்திய வருடத்திலும் 1 கோடியே 14 லட்சம் ரூத்தல் கூடுதலானது.

● பிரான்ஸ்தேச போடோ நகர் அதிமேற்றிராணியாரான கருதினல் றிச்சேட் ஆண்டகையும், பரீஸ் நகர் அதிமேற்றிராணியாரான கருதினல் வியூப் லொட் ஆண்டகையும் முறையே சென்ற மாசிமாதம் 5ஆம் திகதியும், 15 ஆம் திகதியும் காலஞ் சென்றமையாலே இருவாரகாலத்தில் பிரான்ஸ் தனது கருதினல்மார் இருவரை இழந்திருப்பதுடன திருச்சபைக கருதினல்மார் தொகையும் 109 ஆகக் குறைந்து போயிருக்கிறது.

● இந்திய பிரதமர் திருமதி இந்திராகாந்தியின் 23 வயதுள்ள மகன் ராஜீவ் காந்திக்கும், இவரது இத்தாலிய மணவாளியாகிய 21 வயதுடைய சோனியா மயினோவுக்கும சென்ற 25ஆம் திகதி புதுடில்லியிலுள்ள பிரதமர் இந்திராகாந்தியின் இல்லத்தில் ஆடம்பரமற்ற முறையில் அமைதியாகத் திருமணம் நிறைவேறியது.

● இங்கிலாந்திலும், வேல்சிலும் சென்ற 1967-ம் ஆண்டில் 69 புதிய கத்தோலிக்க கோவில்கள் ஆராதனைக்குத் திறந்துவைக்கப்பட்டதோடு இப்பொழுது அவ்விரு நாடுகளிலும் மொத்தமாக 3,528 கத்தோலிக்க கோவில்கள் இருந்துவருகின்றன. அங்கே கடந்த பத்து வருடங்களிலும் 443 புதிய கோவில்கள் பாவனைக்கு வந்துள்ளன.

● பிரித்தானிய தேசத்தில் வசிக்கும் மக்கள் சென்ற 1967-ம் ஆண்டிலே உருளைக்கிழங்குக்கென்று 36 கோடி பவுணுக்குமேல் செலவிட்டிருக்கின்றார்கள். அங்கு ஒவ்வொரு மனிதனும், பெண்ணும், பிள்ளையும் வாரம் ஒன்றுக்குச் சராசரியாக நான்கு ரூத்தல் உருளைக்கிழங்கு சாப்பிட்டிருக்கின்றார்கள்.

● காலஞ்சென்ற அருளப்ப பாப்பாணவரின் மைத்துனியான மரியா கறுறு றொங்கல்லி அம்மையார் அண்மையிலே தனது 82-ம் வயதில் சொட்டோ இல மொன்ரியில் காலஞ்செல்லலாயினர். இவர் அருளப்ப பாப்பானவரின் சகோதரரான சவேரியோ றொங்கலி அவர்களைத் திருமணஞ் செய்திருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்பங்களில் சமாதானத்தை எவ்வாறு ஏற்படுத்தலாம் ?

(பி. சவரிமுத்து)

தற்கால உளநூல் விற்பன்னரின் கூற்றுப்படி பாலயக் குற்றவாளிகளின் தொகை இவ்வுலகில் அதிகரிப்பதற்குக் காரணம் குடும்பங்களில் ஏற்படும் சமாதானக்குறைவே. எனவே, ஒரு நாட்டில் சமாதானம் ஏற்படவேண்டுமாயின் அந்நாட்டில் வாழும் குடும்பங்களில் சமாதானம் நிலவவேண்டும். இதை எவ்வாறு நிலைநாட்டமுடியுமென்று சுருக்கமாக ஆராய்வதே இக்கட்டுரையின் முக்கிய நோக்கமாக இருக்கிறது. பொதுமக்களில் சமாதானம் ஏற்படுவதற்கு இருவழிகளுண்டு. ஒன்று பொதுவாழ்க்கைத் துறை. மற்றையது சமயத்துறையென்று கூறலாம்.

**பொதுவாழ்க்கைத்** துறையில் நாம் மக்களிடம சமாதானத்தை ஏற்படுத்தவேண்டுமாயின் "மக்களெல்லோரும் ஒருகுலம்" என்ற ஒருவிரிந்த பரஸ்பரக் கொள்கை உலகில் பரவச் செய்யவேண்டும். "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற பண்டைத் தமிழ் நூலாகிய புறநானூறில் கூறப்பட்ட நல்லெண்ணம மக்களிடையே பரவவேண்டும். உலகிலுள்ள பல்வேறு பாகங்களில் வசிக்கும் மக்களின் அடிப்படைத் தேவைகள் ஒரேவகையானவையாயிருக்கின்றன. இவை பொதுவாக உணவு, உடை, உறைவிடம், சுகாதாரவசதிகள், ஓய்வுநேரப்பொழுதுபோக்கு ஆகியனவையே.

எனவே, ஒரு தேசத்துமக்கள் தாங்கள் சந்தோஷமாக வாழவிரும்புவதுபோலவே, பிற நாட்டுமக்களும் வாழவிரும்புகின்றனர் என்ற உண்மையை உணர்ந்து, தாங்களும் வாழ்ந்து பிறரும் வாழவழிவகுப்பதே பொதுவாழ்க்கைத் துறையில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்குச் சிறந்த கருவியாயமைகிறது.

ஐக்கியநாட்டுக் கல்வி கலாச்சார வெளியீடொன்றில் "மக்களின் மனங்களிலேயே போர் உற்பத்தியாகின்றது; எனவே, மக்களின் மனங்களிலேயே சமாதானத்தின் வித்தும் விதைக்கப்படவேண்டும்" என்று கூறப்பட்டிருக்கிறது.

எனவே, இப்பாரியகடமை—பிறநாட்டவர்களில் நல்லெண்ணத்தை ஏற்படுத்துவது—ஒவ்வொரு அரசாங்கத்தையும் பொறுத்ததாயிருக்கிறது. "வாழ்-வாழவிடு" என்ற குறிக்கோளும் இவ்வுண்மையைச் சுருக்கமாகச் சுட்டிக்காட்டுகிறது.

உலகில் சமாதானம் ஏற்படவேண்டுமாயின் ஒவ்வொரு தேசத்திலும் இல்லை ஒவ்வொரு நாட்டிலும் சமாதானம் ஏற்படவேண்டும். எந்த நாட்டிலும் சமாதானம் ஏற்படவேண்டுமாயின், அந்நாட்டிலுள்ள குடும்பங்களில் சமாதானம் ஏற்படவேண்டும். எனவே, குடும்பங்களில் எவ்வாறு சமாதானத்தை ஏற்படுத்தமுடியுமென்று ஆராய்தல் பயனுடைத்து. இதை உலகியல் துறையிலும் சமயத்துறையிலும் ஒருவர் ஆராய்ந்து பார்க்கமுடியும். என்றாலும் இந்தக்கட்டுரையில் சமயத்துறையிலுள்ள உண்மைகளைக்கொண்டு ஆராய்வோம்.

ஒரு குடும்பத்திலுள்ளவர்களை — பிதா, மாதா, பிள்ளைகள், இனசனர்— இணைக்கும் பந்தனம் ஒன்று இருக்கிறது. அது அறுந்தால் அல்லது தெறித்தால் அக்குடும்பம் பிளவுபட்டு பற்பல இன்னல்களுக்கு இடம் ஏற்படும். இப்பந்தனம எல்லோரும் நன்கறிந்தவாறு "அன்பே". ஒருகுடும்பத்தின் முதுகெலும்பாக ஒருவரை ஒருவரோடு இணைக்கும் பந்தனமாக அமைவது அன்பு. ஒருகணவனானவன் தன் மனைவியில் கொண்டுள்ள அன்பின் நிமித்தம் எந்தத் தியாகத்தையும் செய்யத் தயாராயிருப்பான். அவன் காலை தொட்டு மாலை மட்டும் அநுதினமும் ஊக்கத்துடன் உழைத்துத் தன் குடும்பத்தினரைப் பாதுகாக்கவல்லவான். ஒரு தாயானவள் தன்பிள்ளைகளிலும் புருஷனிலும் கொண்டுள்ள **அன்பின்** நிமித்தம் எவ்வளவோ கஷ்டங்களை அனுபவிக்கத் தயாராயிருப்பாள். "கல் என்றாலும் கணவன்; புல் என்றாலும் புருஷன்" என்ற உயர்ந்த இலட்சியத்தைத் தன்மனதிற்கொண்டு தன் கணவனை நேசித்து ஒரு கற்புக்கரசியாக வாழ்ப்பார்ப்பாள். ஒருவருக்கு ஒருவர் அன்பு ஆதரவுள்ளவர்களாய் வாழ்ந்தால்தான் குடும்பத்தில் சமாதானம ஏற்படும் என்ற உண்மையை உணர்ந்து அன்பு அமைச்சலாகிய புண்ணியங்களை அனுசரிக்க வேண்டியவர்களாயிருக்கின்றனர். புருஷனைத் தன் தலைவனாக (திருச்சபையின போதனைப்படி) மனைவி ஏற்றுவாழும் குடும்பங்கள் சமாதானம் நிரம்பினவாகவே இருக்கும். அப்படி வாழும் மனைவிமாரைக் கணவர்களும் தங்கள் கண்ணின்மணிகள்போலவேமதித்து அன்பு காட்டி வாழ்வர்.

குடும்ப வாழ்க்கையில் பிள்ளைகளும் ஒரு பிரதான பகுதியாகத் திகழ்கின்றனர். சேயை நேசியாத தாயில்லை என்று கூறலாம். தனயனை நேசியாத தந்தை இல்லை என்றும் கூறலாம் ஆனால், அன்புக்குறைவின் காரணமாகப் பெற்றோரை நேசியாத பிள்ளைகள் எத்தனையோ பேர் இருக்கின்றனர். இவர்களாலேயே பெரும்பாலும் குடும்பங்களில் தாய் தந்தையருக்கிடையில் தகாறுகளும் அபிப்பிராய பேதங்களும் ஏற்படுகின்றன.

பிள்ளைகளிற் காணப்படும் ஒரு பொதுக்குறைபாடு நன்றிகேட்டுத்தனமென்று கூறலாம். ஒரு தாயானவள் எவ்வளவு கஷ்டப்பட்டுப் பிள்ளைகளைப் பெற்று வளர்த்தாள்? எவ்வளவு தற்பரித்தியாகங்களைச் செய்து பிள்ளைகளை முன்னேற்றம் அடையப் பண்ணினாள்? என்று போதியளவுக்குச் சில பிள்ளைகள் உணருவதில்லை. இதன் நிமித்தம் அமைச்சலீனமுள்ளவர்களாக, அடங்காப்பிடாரிகளாக அவர்கள் வாழ்ந்து பிற்காலத்தில் "ஒன்றுக்குமுதவாக் கட்டைகளாக" உலகின் நடைப்பிணங்களாக வாழ்ந்து தன்பங்கள் மத்தியில் உயிர்விடுகின்றனர்.

ஒரு தந்தையானவன் தன் உடல் பொருள், ஆவியாகிய மூன்றையும் அர்ப்பணம் செய்து காலைதொட்டு மாலைமட்டும் அரும்பாடுபட்டு உழைத்து, தன் பிள்ளைகளின் முன்னேற்றத்துக்காக வாழ்ந்து வருகிறான். அவன் என்னேரமும "தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து முந்தியிருப்பச் செயல்" என்ற குறட்பாவுக்கேற்கத் தன் கடமைகளைப் புரிந்துவருகிறான் ஆனால், பிள்ளைகளோ தங்கள் நன்றிகேட்டுத்தனத்தால் தங்கள் தந்தையின் இருதயத்தைப் புண்படுத்தி வாழும்பொழுது, குடும்பத்தில் எவ்வாறு சமாதானம நிலவமுடியும்? எனவே, பிள்ளைகள் தங்கள் பெற்றோருக்கு அன்பும் அமைச்சலும் காட்டி வாழவேண்டியவர்களாயிருக்கின்றனர். இதற்கு உத்தம எடுத்துக்காட்டாகத் திருக்குடும்பம் அமைகிறது. முப்பது வருடங்களுக்குப் பாலகயேசு தமது தாய்தந்தையருக்குக் கீழ்ப்படிந்து நடந்துவந்தார் என்று வேதாகமத்தில் வாசிக்கிறோம்.

எனவே, குடும்பங்களில் சமாதானத்தை நிலைநாட்டுவதற்கு ஒரே ஒரு கருவி உண்டு. அதுதான் அன்பு. அர்ச். சின்னப்பர் கொரிந்தியருக்கு எழுதிய நிருபமொன்றில் (I கொரிந். 13 : 4-7) அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது. அன்புக்குப் பொறாமையில்லை. அன்பு தன்னைப் புகழாது; இறுமாப்பாயிராது; அயோக்கியமானதைச் செய்யாது; தற்பொழிவை நாடாது; சினமடையாது; தீங்கு நினையாது; அநியாயத்தில் சந்தோஷபடாமல், சத்தியத்தில் சந்தோஷப்படும். சகலத்தையும் தாங்கும், சகலத்தையும் விசுவசிக்கும், சகலத்தையும் நம்பும், சகலத்தையும் சகிக்கும், அன்பு ஒருக்காலும் ஒழியாது" என்று மிகவும் விளக்கமாக வரைந்திருக்கிறார். ஆகவே, அன்பின் வழியே குடும்ப சமாதானத்துக்கு ஒரேவழியாக இருக்கிறது.

# கத்தோலிக்க தேவாலயத்தில் புரோட்டஸ்டான்ட் அதிமேற்றிராணியார்

கடந்த சில மாதங்களாக கிறீஸ்துவ ஒற்றுமை இயக்கம் புது வலிமை பெற்று விளங்குகிறதென்பதில் ஐயமில்லை. பாப்பு 6 ஆம்சின்னப்பர் துருக்கி சென்று அத்தனகொரஸ் பெருந்தந்தையுடன் பேச்சு வார்த்தைகள் நடத்தினார். அத்தனகொரஸ் பெருந்தந்தையும் றோமை சென்று பாப்புவைப் பேட்டிகண்டார். காசாதா, மால்டா, ஹன்டர்கோம்ப் முதலிய இடங்களில் கததோலிக்க, புரோட்டஸ்டான்ட் இறைஇயல் வல்லுனர்கள் ஒன்று கூடி நட்பு முறையில உரையாடல்கள் நடத்தியுள்ளார்கள். உலகனைத்திலும் பல்வேறு கிறீஸ்துவசபைகளைச் சார்ந்த மக்கள் ஒன்றுகூடி மாநாடுகளையும் கூட்டு வழிபாடுகளையும் நடத்தி கிறீஸ்துவ ஒற்றுமைக்காக அரும்பாடுபட்டு வருகிறார்கள்.

## வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த நிகழ்ச்சி :

இந்த ஆண்டு கிறீஸ்துவ ஒற்றுமை வாரம், வரலாற்றுச் சிறப்பு வாய்ந்ததாக விளங்குகிறது. இங்கிலாந்தின் கத்தோலிக்க முதன்மை ஆயரான கர்தினால் ஹீனன் ஆண்டகையின் அழைப்புக்கு இணங்க, கான்டெர்பரி அதிமேற்றிராணியாரான டாக்டர் ராம்சே, வெஸ்ட்மினிஸ்டர் கத்தோலிக்க பேராலயத்திற்குச் சென்று திருவுரையாற்றினார். இவ்வாறு கடந்த 400 ஆண்டுகளாக இங்கிலாந்தில் புரோட்டஸ்டான்டருக்கும் கத்தோலிக்கருக்குமிடையே இருந்துவந்த ஐயப்பாடுகள் பெரிதும் நீங்கி வருகின்றன.

டாக்டர் ராம்சே, கர்தினால் ஹீனன் ஆகிய இருவரும் வெஸ்ட்மினிஸ்டர் பேராலயத்தில் ஆற்றிய உரைகளில் கிறிஸ்துவ ஒற்றுமைப் பாதையில் எதிர்ப்படக்கூடிய இடையூறுகள், அவற்றை மேற்கொள்ள இன்றியமையாப் பண்புகள் ஆகியவைபற்றிக் குறிப்பிட்டார்கள்.

## வேற்றுமைகளின் நடுவில் ஒற்றுமைப் பண்புகள் :

கத்தோலிக்கருக்கும் புரோட்டஸ்டான்டருக்குமிடையே விசுவாசத்திலும் வழிபாட்டிலும் வேற்றுமைகள் பல உள்ளனவென்றும், வேற்றுமைகளை மறந்துவிடவோ உடனடியாக நீக்கிவிடவோ முடியாதென்றும் இரு தலைவர்களும் சுட்டிக்காட்டினார்கள். ஆனால், வேற்றுமைகளை மிகைப்படுத்தாமல், ஒற்றுமையின் அம்சங்களை மனதிற்கொண்டு அவற்றை வளர்க்கப் பாடுபடவேண்டுமென்று வலியுறுத்தினார்கள். பாப்புவும் டாக்டர் ராம்சேயும் வத்திக்கானில் சந்தித்தபொழுது திருத்தந்தை கூறிய சொற்களை கான்டர்பரி அதிமேற்றிராணியார் நினைவூட்டினார். "இனிமேல் நமக்குள்ளே அன்பு வளர்ச்சியடைய நாம் பாடுபடவேண்டும். இந்த அன்பு அதன் வியத்தகு வல்லமையைக் காட்டுவதாக." அன்பின் அடிப்படையில்தான் ஒற்றுமைவளர்ச்சியடைய முடியும் என்பதை டாக்டர் ராம்சே வலியுறுத்தினார்.

## ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ளுதல் :

இந்த ஒற்றுமை முயற்சிகள் எந்தக் குறிக்கோளுக்கு நம்மை அழைத்துச் செல்லப் போகின்றன? இவற்றால் ஏதேனும் பயனுண்டா? என்ற இரு கேள்விகளை எழுப்பி அவற்றிற்கு விடையும் கூறினார் கர்தினால் ஹீனன், இந்த முயற்சிகள் கிறிஸ்துவ உலகின் ஒற்றுமைக்கே வழிகோலும். ஆகவே இவற்றால் பயனுண்டு என்பதை அவர் ஒரே மூச்சில் எடுத்துக் கூறினார்.

கிறிஸ்துவ ஒற்றுமை முயற்சிகளின் முதற் பயன் ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ள பெரிதும் துணை புரிவதாகுமெனக் கருதினலவர்கள் சுட்டிக்காட்டிச் சில உதாரணங்களையும் கூறினார். மெதாடிஸ்ட் சபையை நிறுவிய சார்ல்ஸ் வெஸ்லி கன்னிமரியம்மாள் மட்டில் மிகுந்த பக்தியுடையவராக இருந்தாரென்பதும் ஒரு செபமாலையை வைத்திருந்தாரென்பதும் மெத்தாடிஸ்டுகளுள் பெரும்பாலோருக்குத் தெரியாது. ஆனால் கத்தோலிக்க-மெத்தாடிஸ்ட் பேச்சுவார்த்தைகளின் பயனாக இந்த உண்மை தெரியவந்தது. கன்னிமரியம்மாளைப் பற்றி மெத்தாடிஸ்டுகள் கொண்டிருந்த கருத்துக்களை மறு பரிசீலனை செய்வதற்கு இக்கட்புறவு துணைபுரிந்தது அதேபோல் ஒன்றுபட்ட ஒரு கிறிஸ்துவஉலகில் பாப்பாண்டவருக்கு எத்தகைய இடம் கொடுக்க புரோட்டஸ்டான்டர் உடன்படுவார்கள் என்பதை அறிந்துகொள்ளவும், கிறீஸ்தவ ஒற்றுமைப் பேச்சுக்கள் துணைபுரிந்துள்ளன. பாப்பாண்டவர் தலைமையின்கீழ் பெரியதொரு கிறீஸ்துவ சபை அமைப்பின் ஒரு பகுதியாக ஆங்கிலிக்கன் சபை இயங்க முடியுமென்பதைக் கான்டெர்பரி அதிமேற்றிராணியார் ஏற்கனவே அறிவித்துள்ளார். இவ்வாறு ஒற்றுமையின் அம்சங்களை வலுப்படுத்தவும் ஒருவரை ஒருவர் புரிந்து மதிக்கவும் ஒற்றுமை உரையாடல்கள் துணைபுரியுமென்பதில் ஐயமில்லை.

## இல்லறத்தோரின் முயற்சிகள் :

கடந்த கிறிஸ்தவ ஒற்றுமை வாரத்தில், இங்கிலாந்தின் பாராளுமன்ற அவைத் தலைவர் (மெத்தாடிஸ்ட்சபை) டாக்டர் ஹொரேஸ் கிங், தொலைக்காட்சிப் பேச்சாளர் (ஆங்கிலிக்கன் சபை) திரு. க்ரூக்ஷாங்க், இராணுவ வீரர் (கத்தோலிக்கர்) காப்டன் லெயொனார்ட் செஷையர் ஆகிய மூவரும், வெஸ்ட்மினிஸ்டர் பேராலயத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் முன்னிலையில் வேதாகம நூலைப்படித்து உரையாற்றினார்கள். இரட்சணிய சேனையின் (Salvation Army) வாத்திய இசைக்குழு பக்தி இசை விருந்தளித்தது.

சில ஆண்டுகளுக்கு முன் எவருமே கனவிலும் கருதியிருக்க முடியாத இத்தகைய நிகழ்ச்சிகள் ஒரு கத்தோலிக்க பேராலயத்திலேயே நடைபெற்றிருக்கின்றன. கிறிஸ்துவ இல்லறத்தோர் இந்த ஒற்றுமை முயற்சிகளில பெரிதும் பங்கு கொண்டிருக்கிறார்களென்பது குறிப்பிடத் தக்கது.

## திருச்சபையோடு ஒத்துணர்தல் :

வத்திக்கான் பொதுச் சங்கத்திற்குப் பிறகு கத்தோலிக்க திருச்சபை கிறிஸ்துவ ஒற்றுமையைப் பெரிதும் விரும்பி அதற்காகப் பாடுபட்டு வருகிறதென்பதில் சிறிதளவும் ஐயமில்லை. ஆனால், கத்தோலிக்கர் பலர் இந்த ஒற்றுமை முயற்சிகளில் நம்பிக்கை கொள்ளாமல் இன்னும் பழைய பல்லவிகளையே பாடிக்கொண்டிருப்பது மிகவும் வருந்தத்தக்கதாகும். திருச்சபை காட்டியிருக்கும் பாதையில கிறிஸ்துவ ஒற்றுமைக்காக உழைப்பது நம் அனைவரின் கடமையாகும். திருச்சபையோடு ஒத்துணர்தல்தான் உண்மையான கத்தோலிக்க மனப்பான்மை.

(சர்வவியாபி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெத்சமெனியின் அமைதியிலே!.....

(செல்வி ரோஜா சாமுவேல்)

யேசுமீட்பரின் பாடுகளின் ஆரம்ப கட்டமே ஜெத்சமெனிச் சோலையின் அமைதியிலேதான் நிகழ்கின்றது. பிரிய அன்னையிடம் பிரியாவிடை பெற்றுக் கொள்கின்றார் மைந்தன். தன் அன்புக்குரிய மூன்று சீஷர்களை அழைத்துச் செல்கின்றார் தம்முடன். அவர்களை ஓர் மரநிழலில் தங்கவிட்டு ஜெத்சமெனியின் உள்ளங்கை நாடிப்போகின்றார் சிலசமயங்களில் மனவேதனையின் உச்சகட்டத்தில் தனிமையை நாடுவது மனித இயல்பு. யேசு இறைவன் தான். ஆனால் இப்போதோ அவர் மனுவுருவானவர் அதனால்தானே என்னமோ மனித இயல்புகள் எல்லாம் அவரிலே பரிணமிக்கின்றன. ஒலிவமரங்கள் நிறைந்து அடர்த்தியாயுள்ள இடம். கருங்கற்களாலான பாறை. இரவின் அமைதியோ பயங்கரத்தை அதிகரிக்கின்றது. யேசுமீட்பரின் கண்முன்னே பயங்கர காட்சிகள்!...தனிமையில் தரணியைப்பற்றிச் சிந்திக்கின்றார். மனுக்குலத்தை மீட்க வந்த தமது வாழ்நாட்களின் கடைசிக் கட்டத்தை ஞானதிருஷ்டியில் காண்கின்றார்...சிலுவையின் கொடுமை!...கற்றூணில் கசையடி!... முள்முடியின் வேதனை...பரிகாச நிந்தனை!... கொடுமையான சிலுவையின் பாரம்!... ஆகிய பாடுகளெல்லாம் கண்முன்னே நிழற்படமாக ஓடுகின்றன. உடல் சிலிர்க்கின்றது. பயங்கரம் மேலிடுகின்றது, உடலில் அனுபவிக்கப்போகும் வேதனையிலும் மனவேதனையே நடுநடுங்க வைக்கின்றது. பரலோகத்தை நோக்கி முறையிடவேண்டி முழந்தாள் மடித்தவர் அப்படியே பாறையின்மேல சாய்கின்றார். "ஆ!...பிதாவே!... இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கக் கூடுமானாலோ!..." ஒவ்வொரு மனிதனும் தன் வேதனையின் உச்சகட்டத்தில் முறையிடக்கூடிய வார்த்தைகள்தாம் அவை... அடுத்து நிதமியத்துக்கும் நாசமாகி நரகத்தினுள் விழப்போகும் தொகையான ஆன்மாக்களின் காட்சி கண்களில்!... தான் உலகில் வந்த அலுவலின் நோக்கம் எண்ணத்தில்!...மானிடரை ஈடேற்றியே ஆகவேண்டும்!.. கசப்பான பாத்திரத்தைக் கடைசித் துளிவரை சுவைபார்த்தே தீரவேண்டும!..."ஆனாலும் என் சித்தப்படியல்ல!...பிதாவே!...உமது சித்தப்படியேயாகட்டும்" என்கின்றன உலர்ந்துபோன உதடுகள்.

சிந்தனை மேலும் அலைகின்றது. தாங்கமுடியாத வேதனைகளைப் படப்போகின்றாரே!...எதற்காக?... மானிடரின் பாவங்களிலிருந்து அவர்களை மீட்கவல்லவா?... அப்படியானால் அவர் சிந்த இருக்கும் ஒவ்வொரு துளி இரத்தமும் பயன் தருமா?...அவை நிக் கா லின் கீழ் மிதிக்கப்படுமா?... உலகம் பாவச் சேற்றில் புரண்டு மாளும் காட்சி எதிரே!... அன்பின் தேவனால் உருவாக்கப்பட்ட மனிதன் தேவனில் அன்பு செலுத்த மறுக்கின்றான். இறைவன் இல்லை என்று நாஸ்திகம் பேசுகின்றான். குடிவெறி, சூதாட்டத்தில் திளைக்கின்றான்...வஞ்சமும், புரட்டும், பொய்யும் அவனுக்குத் தண்ணீர்பட்டபாடு!... விக்கிரகங்களை வணங்குகின்றான!...சாஸ்திரம், பில்லிசூனியத்தில் இறைவனைவிட அளவுகடந்த நம்பிக்கை அவனுக்கு!...இவைமட்டுமா!... அசுசியான நினைவுகளில் இன்பம் காண்கின்றான். இரவின் அந்தகாரத்தில், தனிமையின் சூழ்நிலையில் இல்லறபந்தனத்துக்கு வெளியே ஆணும் பெண்ணுங் கூடி காமாதுர சிற்றின்ப லீலைகளில் காணும் களிப்புத்தான் எத்தனை!...எத்தனை!...அதிகம் பேசுவானேன்?...இதோ!...இன்னுஞ் சில நிமிடங்களில் அவரால் தெரிந்துகொள்ளப்பட்ட சீஷர்களில் ஒருவனே முத்தமிட்டு அவரைக் காட்டிக் கொடுத்து நம்பிக்கைத் துரோகியாகப் போகின்றான். தற்கொலை செய்துகொண்டு நரகின் அடித்தளத்தில் புதைக்கப்படவும் போகின்றான். அப்பப்பா!... கொடூரம்!...கொடூரம்!...புனிதரின் அறிவு மயங்குகின்றது. உடல் ஆட்டம் காண்கின்றது...கண்கள் சுழல்கின்றன. ஒரே களைப்பு... அவர் மனதில் பெருகும் துயர வெள்ளம் வடியும் மார்க்கமேது?...இதோ மேனியெல்லாம் வெயர்வை!... சாதாரண நீர்த்துளி வெயர்வையா?... ஐயோ!... இல்லையே!... இரத்த வெயர்வை!...ஆங்காங்கு தரையிலும், கற்பாறையிலும கூடச் சிந்துகின்றது. மனிதன் அளவு மீறிய மனவேதனையில் உச்சகட்டத்தை அடைந்துவிட்டால் வெயர்வை இரத்தமாகவே சிந்தக்கூடும் என்கின்றனர் விஞ்ஞானிகள். அதே நிலையை உண்மையில் அனுபவித்தவர் நம் யேசு மீட்பர் தான. தாங்கொணா மனவேதனையின் தவிப்பு!...யாரிடமாவது சொல்லி ஆறினால் சிறிது இத்தவிப்பு அடங்காதா?...என்ன?...எழுந்துபோகின்றார் தன் அன்பு நண்பர்களிடம்.

ஆனால் இரவின் அமைதியூடே உல்லாசமாகத் தூங்குகின்றனர் மூவரும். யேசுவின் வேதனையோ மேலிடுகின்றது. "என்னோடு கூட ஒரு மணி நேரமாவது விழித்திருக்க உங்களால் முடியாதோ" என்று பாசம் பொங்க முறையிடுகிறார். நோயின் பிடியில், காயங்களின் வேதனையில், மனவேதனைகளின் உச்சகட்டத்தில், மரணத்தின் பிடியில் பிரியமுள்ளோரைப் பறிகொடுத்து அங்கலாய்க்கும் வேளையில் எம்மோடு யாராவது விழித்திருந்து நம் கவலையில் பங்கெடுக்க வேண்டும என்று நாம் விழைந்து ஆசிப்பதில்லையா?... அதே நிலைதான்!... ஆனால் இந்த முறையீடு அவர்களின் காதுகளில் விழுந்ததா?...கண்கள் சொருகிக் கொண்டு வருகின்றன, இன்பமான தூக்கம் அவர்களை ஆட்கொள்ளுகின்றது. ஒரு முறையல்ல!...மும்முறை முறையிட்டும் தனிமையில் தவிக்கும் நிலை தேவமானிடனின் பங்காகின்றது. அவர்களை குற்றஞ்சாட்டியேன்?.... அமலனின் முறையீடு எங்களுக்குமே கேட்கிறது... ஆனால் நாமும் அந்த அப்போஸ்தலரைப் போலவே இறைவனைத் தனிமையில் இன்னும் தவிக்கவிடுகின்றோமல்லவா?

தனிமையிலே தாங்கமுடியாத மனவேதனையை அனுபவிக்கின்றவர்கள், ஒருதவியுமின்றி அநாதைகளாக வாழ்பவர்கள், தம் குறையை விண்டு சொல்லமுடியாத மனக்கஷ்டத்தில் தவிப்பவர்கள், ஆயிரம் உதவியை அள்ளிக் கொடுத்தும புறத்திலே புறத்தி என உற்றார் உறவினரால் தள்ளப்பட்டு வாழ்பவர்கள் எல்லோரும் உறங்கும அர்த்தசாமத்திரி வேளைகளில் ஒரு நிமிட நித்திரையும பிடிக்காமல் உடல் வேதனையிலோ, மனவேதனையிலோ கஷ்டப்படுபவர்கள் முதலியோர் ஓரளவு நம் இறைவன் ஜெத்சமெனி தோட்டத்தில் பட்ட அவஸ்தையில் ஒரு பங்கையாவது உணர்ந்து கொள்வார்கள். எப்படியிருப்பினும் இந்தத் தபசுகாலத்தின ஆரம்பகட்டத்தில் இறைவன் ஜெத்சமெனியில் பட்ட கோர மனவேதனையையும், சிந்திய இரத்த வெயர்வையும்பற்றித் தியானிப்போம்!...

"ஜெத்சமெனி தோட்டத்தில்
அவஸ்தையுற்ற
யேசுவே!...என் ஜீவனே!...
என் கொடும் பவமே
உத்தமனுன் மேனியிலே
இரத்த வெயர்வை
ஊறி வெளிச் சிந்திடவே
செய்ததன்றோ!..
வித்தகனே!...வேதனையின்
கொடுமையிலே
விழுந்து நொந்து நீர்கலங்கும்
நிலைதனிலே
இத்தரையில் இனியுனியும்
பவங்களை நீத்து
இனிய உந்தன் இதயமது
மகிழச் செய்வேன!"

தியானித்து விட்டால மட்டும் போதுமா?... அன்பர் யேசுவுக்கு இனி மேல் ஆறுதல் கொடுக்க விழைவோம.

(தொடர்ச்சி மறுபக்கம்)

## அன்பு பற்றிய திருமறைத் திருவாசகம்

ஆசை, பற்று, நேசம், பாசம், பட்சம், உறவு, சிநேகம், நட்பு, காதல் என்பன அன்பின் பல்வேறு நிலைகளைக் குறிக்கும் தமிழ்ச் சொற்கள்.

அன்புடைமைபற்றி நம் தமிழ்நூல்கள் பலவாறு விதந்து கூறுகின்றன. அன்புத் திருமறையானது இதைப் பரம அன்பு என மேம்படுத்திப் பெருமையுற விளக்கமும் கொடுக்கிறது.

இறையன்பும பிறரன்பும் இணைந்ததுவே முழுமையான பரம அன்பு — என்பதையே திருமறைத் திருவாசகம் விளக்கிக் காட்டுகிறது.

"இறையன்பின்றேல் பிறரன்பின்று;
பிறரன்பின்றேல் இறையன்பின்றும்"

என்பது திருமறை உரையாகும. வேதாகமத் திருநூல்களில அன்புபற்றிய விரிவுரைகள் பரவலாகக் குறிக்கப்பட்டுள்ளன.

தனிப்பெரும் திருமறை எழுத்தாளராகிய புனிதசின்னப்பர் கொரிந்தியருக்கெழுதிய நிருபத்தில அன்பின இலக்கணத்தையும், இயல்பையும் நன்கு விளக்கிக் காட்டுகிறார்.

முன் தபக்காலத்தின் மூன்றாவதாகிய பஞ்சிகை ஞாயிறுத் திருப்பலி வேளையில இவ்வன்புபற்றிய திருவாசகம் திருமறை எங்கணும வாசிக்கப்படுகிறது. புனித சின்னப்பர் அன்புபற்றிக் கூறும் கருத்துக்கள் எமக்கு நல விருந்தாய் உதவுவன:

"நான் உலக மொழிகளையும் வானவர் மொழிகளையும் முற்றுமறிந்தவனாயிருந்தும் என்னிடத்தில அன்புமாத்திரமில்லாதிருக்குமாயின் அவற்றாலாம் பயன்தானென்ன?"

'அன்பிலாப்புலமை வெறும் ஓசையிடும வெண்கலக் கைத்தாளத்துக்கு ஒப்பானதாகும்.'

"கல்விமேதையாக, நுட்பவல்லுனனாக, நூதன இறைவாக்கினனாக — மலையையும் பெயர்க்கத்தக்க மகாவிசுவாசமுள்ளவனாக விளங்கிடினும் இறையன்பு இலலையாயின் இவையெலலாம இல்லாதனவே."

"என் உடமைகளை யெல்லாம் இரவலர்க்குக் கொடுத்தாலும, என்னைத் தகனப்பலியாக்க விழைந்தாலும் தேவ அன்பில்லாவிடில் இவைகள் இசையற்றவையே."

புனித சின்னப்பர் அன்புபற்றிக் கூறும் அருள்வாசக அமைப்பு இதுவாகும்.

பொறுமையில் வளர்வது அன்பு
தயவினில் தழைப்பது அன்பு
பொறாமை அற்றது அன்பு
பொருக்கெனப் புகாதது அன்பு
பெருமைப் படாதது அன்பு
பொதுமை கொள்வது அன்பு
சுயநலம சுடுவது அன்பு
பிறர்நலம் பேணப்பது அன்பு
கோபம் கொள்வது அன்பு
பாவம் பகைப்பது அன்பு
நீதியில் மகிழ்வது அன்பு
அநீதியில் அழுவது அன்பு
உண்மையில் மலர்வது அன்பு
பண்பினில் திப்பது அன்பு
சகிப்பைத் தருவது அன்பு
தாங்கி நடப்பது அன்பு
நிலைத்து நிற்பது அன்பு
நினைப்பதில் மேலது அன்பு
அனைத்தையும ஆள்வது அன்பு.

இப்பரம அன்பின வழிநின்று, திருமறைகூறும் அன்புநெறிவாழ்ந்து, அன்புப் பணிபுரிந்து இன்பநிலை எய்துவோமாக!

"செயற்கரிய யாவுள அன்பினதுபோல்
வினைக்குரிய யாவுள காப்பு" —குறள்

ஆசிநாதன்.

## 75-வது ஆண்டு நிறைவு விழா

ஊர்காவற்றுறையின் முன்னாள் பட்டினசபைத் தலைவரும், 2-ம் வட்டாரத்தின் தற்போதைய அங்கத்தவருமான திரு. வஸ்தியாம்பிள்ளை சவரிமுத்து ஐயாத்துரை அவர்களின் 75-வது ஆண்டு நிறைவுவிழா கடந்த 3-2-68 சனிக்கிழமை நடைபெற்றது.

அன்று காலையில ஊர்காவற்றுறை பங்குக்குருவர் வண. எஸ். சுவாம்பிள்ளை அவர்களால் ஸ்தோத்திர பாடற்பூசை நிறைவேற்றப்பட்டு, 'தெதேயும்' கீதம் பாடப்பட்டது.

அன்னாரின் இல்லத்தில் நடைபெற்ற விருந்தில் கலந்துகொண்ட பிரமுகர்கள்பலர் அவருக்கு வாழ்த்துக்கள் கூறினர். —நிருபர்

● இந்தியாவிலே குடும்பக் கட்டுப்பாட்டைப் பரப்புவதற்கான ஒரு நடவடிக்கையாய்க் கலியாணஞ் செய்யாதிருக்கும் பிரமச்சாரிகளிடமிருந்து வருமானவரி அறவிடுவதைத் தவிர்த்துவிடுதற்கான ஒரு பிரேரணைபற்றி இந்திய அரசாங்கம ஆலோசித்து வருகின்றதாம்.

## பீற்றர் எம்மனுவேல் சோய்சா

தோற்றம்: 29-10-37
மறைவு: 27-1-68

"என்னுடைய நாட்களோ நிழலைப் போல் சாய்ந்துபோயிற்று; நானோ புல்லைப்போல் உலர்ந்தேன்"

சங். 101—12.

மண்ணில் மறைந்தாலும் எம் மனக்கண்ணைவிட்டு என்றுமே நீங்காத என் நேசக் கணவர் திடீர்நோயுற்று இறைவனடிசேர்ந்து ஒருமாதம் பூர்த்தியாகின்றது. இதனைக் கண்ணுறும குருப்பிரசாதிகளே, கன்னியர்களே, இல்லறத்தோரே இவ்வான்ம இளைப்பாற்றிக்காக இரக்கமுள்ள தேவனை மன்றுடிபபடி தயவுடன் வேண்டுகின்றோம்.

துயருறும் மனைவி

30-68

## அகஸ் கிறிஸ்தோப்பர்

அவர்களின்

## நன்மரண ஞாபகம்

பிறப்பு: 17-4-1903
இறப்பு: 28-2-1967

யாழ்நகரின் நாயகமாய் நற்குணங்கள்
யாவுமுறை நல்லவனாய் வாய்ந்த வள்ளல்
ஏழைகளின் நல்லன்பன் கிறிஸ்தோப்பர்தான்
இன்றிருந்து ஓராண்டு கடந்த போதும்
நாளுமிவன் வாழ்வார்போல் உலவு கின்றார்
நாம்மறக்க இயல தன்மை தானே
நீழுமிவர் ஆன்மாவும் சாந்தி பெற்று
நித்தியத்தில் இன்புறவே வேண்டுவோமே.


மனைவிமக்கள் இனசனர்கள் மற்று மூன்ற
மக்களுமே மதித்துப் போற்ற
அனைவரிலும் ஆதரவும் அன்பும் பண்பும்
அருமறையின் அனுட்டான அநுசரிப்பும்
துணையெனவே தூயவனாய் வாழ்ந்தவன்வல்
தூய கிறிஸ்தோப்பர் ஆவமா
இணையுமொரு பரகதியிற் சாந்தி கொள்ள
எம்பரனைப் பிரார்த்திப் போமே.

மனைவி, மக்கள், இனசனர்,

19/12, கொன்வென்ற் தெற்கு,
யாழ்ப்பாணம்.

31-68

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




### அன்புள்ள தம்பி, தங்கையரே!

1968ஆம் ஆண்டின் தபசுகாலம் ஆரம்பமாகி விட்டது. திருச்சபையானது எமது நெற்றியில் சாம்பரைப்பூசி எமது சீவியத்தின் முக்கிய நோக்கத்தை எமக்குத் திரும்பவும் நினைப்பூட்டி விட்டது: "மனிதா, மண்ணுயிருக்கிருய்; மண்ணுய்ப் போவாய்" என்ற ஆழ்ந்த சிந்தனையை எமது மனத்தில் தட்டியெழுப்பி விட்டது.

தபசுகாலம் ஒவ்வொன்றும் வாழ்க்கையிலே நாம் பரிசுத்தத்தால் முன்னேறும் ஒவ்வொருபடியாக இருக்க வேண்டும். எமது பிழைகளை நாம் காண்பது அரிது. பிறரே அவற்றைத் தெளிவாகக் கண்டு கொள்கிருர்கள். ஆனல், எமது பிழைகளைப்பற்றியும், பாவங்களைப்பற்றியும் ஆழ்ந்து சிந்தித்தால் கடவுள் உதவியுடன் நாமும் அவற்றைக் கண்டு கொள்வோம்.

ஆகவே, இவ்வருட தபசுகாலத்தைக் கடவுள் எமக்கு அளித்த அரிய பேருகக் கொண்டு ஒவ்வொருவர் பங்கிலும் நடைபெறவிருக்கும் ஞான ஒடுக்கத்தில் பங்குபெற்று நாம் ஒவ்வொருவரும் எம்மைத்திருத்திக் கடவுளின் உத்தம பிள்ளைகளாக விளங்குவோமாக.

— அண்ணு

# கத்தோலிக்கரும் தபசுகாலமும்

[செல்வி. காமல் இக்னேஷியஸ்]

இம்மாசிமதி இருபத்தி எட்டாம் நாள் புதன்கிழமை கத்தோலிக்க திருச்சபை விபூதித்திருநாளைக் கொண்டாடியது. அன்றிலிருந்து திருச்சபையின் நாற்பது நாட்தபசுகாலம் ஆரம்பமாகிவிட்டது. கடந்தவருடம் குருத்து ஞாயிறு அன்று மந்திரித்த ஒலிவமரக் கொம்புகள் அல்லது குருத்தோலைகளைச் சுட்டெரித்து எடுத்த சாம்பலைக் குருவானவர் திருப்பலிப்பூசைக்கு முன் மந்திரித்து விசுவாசிகளின் நெற்றியிலே சிலுவையடையாளமாகப் பூசும்போது "மண்ணுல் உண்டாக்கப்பட்ட மனிதா நீ மறுபடியும் மண்ணுய்ப் போவாய்" என்று ஒவ்வொரு கிறிஸ்தவனிடமும் உரைத்து அன்று இறைவன் மனுவோர்க்கிட்ட மரண தண்டனையை இன்று இந்நாளில் எல்லோரிடமும் நினைவூட்டித் தபம்செய்ய அழைக்கின்றது திருச்சபை. யேசுநாதர் வனந்தரத்தில் நாற்பது இரவும் நாற்பது பகலும் உபவாசமாயிருந்தே வழிகாட்டியிருக்கின்றூர் எமக்கு.

### வாழ்க்கை நாடகம்

பிறப்படைந்த மனிதன் இறப்பையும் அடைந்தேதீரவேண்டும் ஒருநாள். இது இயற்கையின் நிலை என்பதைவிட இறைவனின் நியமம் என்பதே சாலப் பொருந்தும். இப்பரந்த உலகில் மனிதன் எந்தப்பயங்கரத்துக்கும் தன்வலிமையைக் கொண்டேனும் தப்பித்துக் கொள்ளலாம் எனினும் "மரணம்" என்ற பேராயுதத்திற்குமட்டும் எவனும் தப்பமுடியவே முடியாது. சுருங்கங்கூறின் வாழ்க்கை என்ற நாடகத்தின் முடிவுக்காட்சி மரணம். இந்த அதிபயங்கரத்தை வருவிக்கக்கூடிய மரணத்தைப்பற்றி மனிதன் அடிக்கடி சிந்திப்பானேயாகில் அவன் நேர்மைக்கும் நீதிக்கும் பயந்தவனுய் வாழ்க்கை நாடகத்தைச் சரியானமுறையில நடித்துமுடிப்பான். எம்மதத்திலும் மனிதனுடைய வாழ்வின் எல்லையைப்பற்றியே சிந்தனை. அதிலும் கத்தோலிக்க திருச்சபை அடிக்கடி மானிடர்க்கு மரணத்தை வலியுறுத்தி நிற்கின்றதோடு விபூதித்திருநாளை மரணத்தை அதாவது இறப்பை உணர்த்தும் தினமாகக் காட்டுகின்றது.

### அன்றைய நிலை

அன்றுபாவிகள் பகிரங்கமாகத் தண்டனை பெற்றனர். விபூதித்திருநாளன்று தான் திருச்சபையின் ஆரம்பகாலத்தில் பகிரங்கபாவிகள் எனப்படுவோர் தாங்கள் செய்த குற்றங்களுக்காக மன்னிப்பு அடையும்பொருட்டு குருவரிடம் செல்லும்போது குருவர் சாம்பலை அவர்கள் சிரசின்மேல் தூவிச் சாக்குத்துணியையும் தண்டனையாக அளிப்பதோடு அவர்கள் அன்று அவ்விபூதித் தினத்திலிருந்து நாற்பதுநாட்களும் ஆலயத்திற்குள்ளே அமர அனுமதிக்கப்படுவதில்லை. வெளியேதான் நிற்கவேண்டும். அதன்பின் பெரியவியாழக்கிழமை தான் அந்தப்பாவிகள் ஆலயத்தினுட் செல்லவும் திவ்விய பூசைப்பலி நற்கருணைப்பக்தி ஆகிய சடங்குகளில் மற்றவர்களோடு கலந்துகொள்ளவும் அனுமதி அளிக்கப்படும். பதினோராம் நூற்றுண்டுவரையில் திருச்சபையின் இச்சட்டம் அமுலிலிருந்தது. விபூதித் திருநாளன்று பாலஸ்தினுமலையிலுள்ள புனித அனஸ்தாதியம்மாள் ஆலயத்திலே நடைபெறும பூசைப்பலிக்காக அன்றைய பரிசுத்த பாப்பரசர் விசுவாசிகள் உட்பட அனைவரும் கறுப்பு உடையணிந்து பாதரட்சையில்லாது நடந்துசெல்வதும் வழக்கமாயிருந்தது. காலப்போக்கில் உலகிலே மாற்றம்நிகழ ஆரம்பித்தது. அதைத்தொடர்ந்து திருச்சபையிலும் சட்டதிட்டங்களில் மாற்றம் காணவேண்டிய அவசியமும் ஏற்பட்டது. அதனுல் பாவிகள் பகிரங்கமாகத் தண்டனை விதிக்கப்படுவது தடைசெய்யப்பட்டன. 1090-ம் ஆண்டு திருச்சபையின் தலைவராயிருந்த அர்பன் பாப்பரசரால் இவ்வழக்கம் ஒழிக்கப்பட்டு, பொதுவாக விசுவாசிகள் குருமார் அனைவருமே சாம்பலினுல் நெற்றியிலே சிலுவையடையாளம் இட்டுக்கொள்ளப்பட்டுவந்தது. விபூதித் திருநாளிலிருந்து யேசுநாதருடைய திருப்பாடுகளை நினைவூட்டும் நோக்கமாகத் திருச்சபையின வெளியாடம்பரங்கள் விலக்கப்படுவதோடு ஆலயத்தின் திருப்பலிப்பீடம் மலர்களும் சோடனைகளும் இன்றிக்காணப்படும். தபசுகாலம் நாற்பதுதினங்களும் கிறிஸ்தவர்கள் ஒவ்வொருவரும் உணவில் ஒறுத்தல், உல்லாசமான பொழுதுபோக்குகளைக் குறைத்தல் சினிமாக்களைத் தவிர்த்தல் முதலிய தபசுகாலத்திற்கேற்ற அனுசாரங்களில் சிரத்தையாயிருப்பதுடன் தபசுகாலத்தில் கூடுமானவரை இராப்பூசை [illegible] திவ்விய விருந்திலும் பங்குபற்றவும் கத்தோலிக்க திருச்சபை விரும்புகிற்கின்றது. காரணம் கிறிஸ்தவனே நீ பாவி. உன்னுடைய குற்றங்கட்காக நீ பரிகாரம் தகுந்தவிதமாகப் பண்ணினுலன்றி இரட்சகருடைய வெற்றியில் நீ பங்குபெறமுடியாது. இதை விசுவாசிகள் அனைவருமே மனதில் கொள்ளவேண்டும்.

1968-மானிட உரிமைகள் ஆண்டு.

# மானிட உரிமைகள்

(ஆர். கதறீன் நோரு)

இம் மண்ணில் மானிடராய்ப் பிறந்தவருக்கு தங்கள் வாழ்க்கையைச்செவ்வனே வழிநடத்திச் செல்ல ஒவ்வொரு கடமையும் உரிமையும உண்டு அவ்வாறு ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட முறையில சில உரிமைகள் இல்லாவிடில் அவர்களும் மிருகங்களைப்போல சீவிக்கவேண்டிய நிலை ஏற்படும். அந்நிலை மானிடர்க்கு ஏற்படாதவண்ணம், மாக்களுக்கு இல்லாத 'பகுத்தறிவு' என்னும சிறப்பான அறிவினைக் கொடையாக இறைவன் மக்களுக்கு அளித்துள்ளார். அவ்வறிவினுள் மக்களுக்குரிய உரிமைகள் யாவும் அடங்கும். அவை ஐம்புலன்களுக்குரிய உரிமைகள், சட்டவிதி சம்பந்தமானவை என இருவகையாகப் பிரிக்கலாம்.

முதலாவதாக ஐம்புலன்களான, மெய், கண், வாய், மூக்கு, செவி இவைகளை எடுத்துக்கொண்டால், மெய்க்கு ஆட அசைய, குனிய நிமிர என பல உரிமைகள் உண்டு. கண்ணுல் நாம் எவற்றையும் பார்க்கமுடியும. கண்களின்றேல் எதனையுமே காணமுடியாது. அதனுல் கண்களுக்கு பார்க்கின்ற உரிமையுண்டு. பார்க்கின்ற உரிமையை பார்க்கவேண்டாமென்று சொல்ல எவருக்குமே உரிமையில்லை. கண்பார்க்க கை செய்யுமென்பர். கைகளின்றேல் எத் தொழிலையுமே செய்யமுடியாது. மனிதரின் அத்தியாவசிய தேவைகளான உண்ணல், உடுத்தல் என்பவற்றையும் செய்யமுடியாது. பாடுபட்டு உழைக்க கைகள் வேண்டும். கைகள் மாத்திரம் இருந்தால் வேலைசெய்ய முடியாது. அதற்குத் துணையாக கால்களும் வேண்டும். காட்டிலும் மேட்டிலும் கடுந் தொலைவிலும் நடக்க உரிமையுண்டு. எங்கும நடந்துசென்றுதான் எதனையும் தேடவேண்டும். ஆதலால் கண்களுக்கு எதையும் பார்க்கவும், கால்களுக்கு எங்கும நடக்கவும் உரிமையுண்டு. அடுத்து நாசி; நாசிக்கு சுவாசிக்க உரிமையுண்டு. மனிதர் சுவாசிக்காமல் உயிர்வாழ முடியாது. நறுமணமோ, துர்மணமோ எதனையும் சுவாசிக்க உரிமையுண்டு. இவற்றில் கடைசியாக வாய்;

ஒரு குழந்தை பிறந்து மூன்று மாதங்கள் கடந்தபின் அது கொஞ்சம் மழலையில் பேசுகின்றது. இன்னும் சில மாதங்கள் கடந்தபின் நன்ருகப் பேசக்கூடிய பருவத்தையடைகின்றது அத்துடன் உணவுண்ணவும உரிமையுண்டு. ஆகவே எதனையும் பேசவேண்டாமென்றோ, உண்ணவேண்டாமென்றோ சொல்லவோ தடுக்கவோ எவருக்கும் உரிமையில்லை. அந்தப் பேசக்கூடிய நிலையை மனிதருக்கு மாத்திரமே ஆண்டவர் அளித்துள்ளார். ஆதலால் அவ்வுரிமையை நல்லவழியில் தேவனைப் புகழும்வண்ணம் நல்லவகையில் பேசி நன்னெறியில் நடப்பதே நமது கடமையாகும்.

பேசக்கூடிய அனைவருக்கும் கல்வி பயில உரிமையுண்டு. குறிப்பிட்ட சிலர் தான் கல்வி கற்கவேண்டுமென்ற நிலையில்லை. கற்பதினுல் நம் அறிவைப் பன்மடங்கு விருத்தி செய்யலாம். உயர்ந்த நிலையினை அடையாம். அதனுல் தான்:

> "கற்கை நன்றே கற்கை நன்றே
> பிச்சை புகினும் கற்கை நன்றே"

என்று வள்ளுவப் பெருந்தகை திருவாய் மலர்ந்தருளினுர். அவ்வுரிமையைப் பறிக்க எவருக்கும் அதிகாரமில்லை.

சட்டவிதி சம்பந்தமானதில் மெய் விவாகத்தை தடைசெய்ய யாருக்கும் அதிகாரமில்லை, பெற்றேர், உற்றூர், உறவினர் விருப்பமில்லாவிட்டாலும், ஒரு ஆணே அல்லது பெண்ணே, தான் விருமபிய பெண்ணையோ, ஆணையோ விவாகம் முழு உரிமையுண்டு. அவர்கள் விருப்பத்தை தடைசெய்ய மற்றவர் முயன்ருலும் அதை நிராகரிக்கவும் அவர்களுக்கு உரிமையுண்டு.

கடைசியாக, பிறப்புரிமை, இலங்கை மக்கள் இலங்கையில் தான் பிறக்க வேண்டும்–வாழவேண்டும், தன்சொந்த நாட்டையல்லாத மற்ற நாடுகளில் வாழக்கூடாது என்று சட்டம் பல கூறினுலும் உலகம் அனைவருக்கும் சொந்தம். நாட்டின் பலபகுதியிலும் வாழ அனைவருக்கும் உரிமையுண்டு.

இவ்வாறு ஆண்டவன் அளித்த அரும்பெரும் உரிமைகளை மக்கள் ஏற்று, அவைகளை மதித்துப் போற்ற வேண்டியதே நமது கடமையாகும்.

## ஜெத்சமெனியின்...

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

எமது தனிமை நிலை, மனவேதனைகள், கஷ்டங்களை பாவிகளின் பாவங்கட்குப் பரிகாரமாக நல்மனதுடன் ஏற்போம். இரவில் விழித்தெழும் வேளைகளிலெல்லாம் நம் சிந்தனையை நமக்காக இரவு பகல் சற்பிரசாதக் கூட்டில் யாவராலும் கைவிடப்பட்டுக் காத்துக் கொண்டிருக்கும் அன்பர் யேசுவுக்கு சில மனவல்லயச் செபங்களை சொல்லி ஆறுதல் அளிப்போம் பெரிய வியாழக்கிழமையன்று இரவிலும் பகலிலும் எம்மால் முடிந்தளவு நேரம் ஆலயத்தில் தங்கியிருந்து அவரது பாடுகளைத் தியானிப்போம். "என்னேடு ஒருமணி நேரம் விழித்திருக்க முடியாதோ" என்று கேட்கும் அன்பருக்கு ஆறுதல் அளிக்க ஒவ்வொரு வியாழக்கிழமை இரவு 11—12 மணி வேளையிலோ, அன்றேல் மாதத்தின் முதல் வியாழன் இரவிலோ, முடியாவிட்டால் வேறு ஏதாவது நமக்கு வசதியான வேளையிலோ திருமணித்தியாலப் பக்தி, இரவு ஆராதனைகளை ஆரம்பிப்போம். இவ்விதமாக இறைவனின் மேனியில் வடியும் இரத்த வெயர்வையை துடைத்து அவருக்கு ஆறுதலளிப்போமாக.

❁ தென்னுபிரிக்காவிலே முன்னர் பசுற்றேலாந்தென்று அறியப்பட்ட லெசொத்தோ நாடு சமீபத்திலே சுதந்திரம் அடைந்ததும் தனது முதலாவது ஸ்தானிகராய் வத்திக்கானுக்கு அனுப்பிய திரு. யோசெவ் கொட்சோகோன் அவர்கள் தமது நியமனபத்திரங்களைச் சிலதினங்களின்முன் பாப்பரசரிடம் சமர்ப்பித்தபோது, குவிந்த வடிவாய் அவர் தரித்திருந்த வைக்கோலால் இழைந்த அழகானதொப்பியும், மற்றும் தேசிய உடைகளும் எல்லோரையும் பிரமிக்கச்செய்தன.

● கோறியாவிலே 1866-ம் ஆண்டு மாசி 17ஆம் திகதிக்கும், 1867 ஆம் ஆண்டு தை 20ஆம் திகதிக்குமிடையில் அந்நாட்டின் விக்கார் அப்போஸ்தலிக்குவாயிருந்த சைமன் பேர்னியுக்ஸ் மேற்றிராணியாரும், பிரான்சிய – கோறிய குருமார் பதின்மரும், மற்றும் இல்லற கத்தோலிக்கருமான 24 பேர் வேதசாட்சிகளாகக் கொலையுண்டார்கள். தற்போது திருச்சடங்காசபை திருச்சங்கம் இவர்களுக்கு முத்திப்பேறுபெற்றபட்டம் அருளுமுகமாக அவர்களின் வேதசாட்சியத்துவத்தைப் பரிசீலனை செய்துவருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்நாட்டுச் செய்திகள்

## ஆயுள்வேத வைத்தியசாலைகள்

ஆயுள்வேத வைத்தியமுறையைப் பழையபெருமையான நிலைக்குப் படிப்படியாகக் கொண்டுவருமுகமாக மாகாணத்துக்கு ஒன்றாக இலங்கையின் ஒன்பதுமாகாணங்களிலும் ஒன்பது மத்திய ஆயுள்வேத வைத்தியசாலைகளை அமைக்கச் சுகாதாரமந்திரி காரியாலயம் தீவிரநடவடிக்கை எடுக்கத் தொடங்கியிருக்கிறது. ஒவ்வொரு உள்ளூராட்சிச் சபையிலும் ஒவ்வொரு ஆயுள்வேத மருந்துச்சாலை அமைக்கும் திட்டத்தின்கீழ் நாட்டின்பல்வேறு பகுதிகளிலும் 150 ஆயுள்வேத மருந்துச்சாலைகள் இதுவரை அமைக்கப் பட்டுள்ளன. இவ்வருடமுடிவுக்குள் மேலும் 50 ஆயுள்வேத மருந்துச்சாலைகள் அமைக்கப்பட விருப்பதாக அறியக்கிடக்கிறது.

## நூறுரூபா கள்ளநோட்டுகள்

யாழ்ப்பாணத்திலுள்ள சாராயத் தவணை ஒன்றிலிருந்து சென்ற22-ம் திகதியன்று கிடைத்த தகவலின்பேரில் பொலிசார் அங்குசென்று ஐந்து 100 ரூபாநோட்டுகளைக் கைப்பற்றி வேலணையைச்சேர்ந்த செல்லையா சிவகுருஎன்பவரைச் சந்தேகத்தின்பேரில் கைது செய்தனர். சாராயம் வாங்குமாறு கொடுபட்ட இந்தக் கள்ளநோட்டுகள் சந்தேகத்தை உண்டுபண்ணியபோது இந்தமோசடி அம்பலமானதாம். கைது செய்யப்பட்டவர் 1,000ரூபாபிணையில் விடப்பட்டிருக்கிறார். இப்போது கள்ளநோட்டுகளை அடிக்கப் பயன்படுத்தப் பட்டதெனச் சந்தேகிக்கப்படும் யந்திரம்ஒன்றையும் பொலிசார்கைப்பற்றியுள்ளார்கள்.

## பொலிசாரின் புதிய நடவடிக்கை

யாழ்ப்பாணத்தில் வாலிபரின்சேட்டைகள் அதிகரித்துவரும் காரணமாகப் பொலிசார் ஒருபுதியநடவடிக்கையில் இறங்கியுள்ளனர். இதன்படி யாழ்ப்பாணப்பகுதி ஆறுபிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, ஆறுபொலிஸ்அதிகாரிகளின் கண்காணிப்பின்கீழ் விடப்பட்டுள்ளது. இனிமேல் கூட்டம்கூட்டமாகவும், இருவர் இருவராகவும், வெளிச்சமின்றியும் இரவிலே சைக்கிளில்திரியும் வாலிபர்களும், மற்றும் வீதிகளிலும், மாணவிகள்கல்லூரிகளின் வாயில்களிலும் நிற்கும் வாலிபர்களும் பொலிசாரின் கண்காணிப்புக்குள்ளாவார்கள்.

## கட்சியிலிருந்து விலகினார்

சனப்பிரதிநிதிகள் சபையிலே நிக்கவரத்தியாத்தொகுதிப் பிரதிநிதியான திரு. முதியான்ச தென்னக்கூன் எதிர்க்கட்சிப் பாராளுமன்றக் குழுவிலிருந்து இராசினாமாச்செய்துவிட்டுச் சென்ற 22 ஆம் திகதிநடைபெற்ற எதிர்க்கட்சிக் கூட்டத்திலிருந்து வெளியேறினார். பாராளுமன்றத்தில் எம். பி. கள் சிங்களத்தில பேசவேண்டுமென்று இவர் கொண்டுவந்த பிரேரணைசம்பந்தமாகக் கருத்துவேறுபாடுகள் எதிர்க்கட்சியினரிடையே ஏற்பட்டமையைத் தொடர்ந்தே இவர் இராசினாமாச் செய்யலானார். இனிமேல் இவர் ஒருசுயேச்சை அங்கத்தவராகச் சபையில் இருந்து வரப் போவதாகத் தெரிவித்திருக்கின்றார்.

## மன்னார் புதிய ஆஸ்பத்திரி

மன்னாரிலே அதிகரித்துவரும் சுகாதாரசேவைகளைப் பூர்த்திசெய்யுமுகமாகப் பொதுமக்களின் வேண்டுகோளுக்கிசைந்து அங்கு புதியஆஸ்பத்திரி ஒன்றை மூன்றுலட்சம்ரூபாசெலவில் கட்டுவதற்கு அரசாங்கம் முடிவுசெய்திருக்கிறது.

## ஏக்கருக்கு 600புசல்நெல்

ஓர்ஏக்கரிலே வருடம்ஒன்றுக்கு600 புசல்நெல் விளைவிக்கமுடியுமென்பதை பேராதனையிலுள்ள இலங்கை அரிசி ஆராய்ச்சிச்சங்கத்தில்கடமையாற்றும் வெளிநாட்டு நிபுணர்ஒருவர் நிரூபிக்க முன்வந்திருக்கின்றார். பிலிப்பைன்ஸ் நாட்டில் "ஐ. ஆர். 8" என்ற விதை நெல்லை அவர் இங்கே பரீட்சித்துப் பார்க்க விருக்கின்றார். இந்த விதை நெல் பிலிப்பைன்ஸ்நாட்டில் வருடம் ஒன்றுக்கு மூன்றுமுறை விதைக்கப்பட்டு ஒவ்வொரு அறுவடைக்கும் ஏக்கருக்கு 200புசல் நெல்கிடைக்கிறது. இதேவிதைநெல்லை உபயோகித்தால் இந்நாட்டு விவசாயிகள் அதே பலனை அடையலாமென அவர்கூறுகின்றார்.

## புதியநடவடிக்கை

கள்ளக்கடத்தலைத் தடுக்கும் புதிய நடவடிக்கையாக ஊர்காவற்றுறை, கோவளம் முனையிலிருந்து கடற்கரையோரமாக முல்லைத்தீவு சுண்டிக்குளப் பகுதிவரையுள்ள இடங்கள் கள்ளக் கடத்தல் பிரதேசமாகக் கணிக்கப்பட்டு அஃது ஒருகட்டுப்பாடான பிரதேசமாகப் பிரகடனஞ்செய்யப் பட்டுள்ளது. விசேட கெசற் மூலம் பிரதமர் இதனை அறிவித்திருக்கின்றார். அதனால் இப்பிரதேசத்தில்வாழும் மக்கள் தங்களுக்குத் தேவைப்படும் பொருட்களை ஒருகுறிப்பிட்ட அளவுக்குமட்டும் வைத்திருக்க அனுமதிக்கப் படுவார்கள். இதற்கான பெர்மிற்றுகளை யாழ்ப்பாண அரசாங்கஅதிபர் வழங்குவார். கட்டுப்படுத்தப்பட்ட இடங்களின்பெயர்கள் வெளியிடப்பட்டதும் புதியநடவடிக்கை நடைமுறைக்குக் கொண்டுவரப்படும். பெர்மிற்றுக்கு மேலதிகமாகப் பொருட்களை வைத்திருப்போர் பொலிசால் கைது செய்து நடவடிக்கை எடுக்கப்படுவார்கள்.

## ஆங்கிலத்தின் அவசியம்

யாழ்ப்பாணப் பொதுசன நூலகத்தில் நடைபெற்ற விஞ்ஞானக் கருத்தரங்கில் பேசியபோது, "தாய்மொழியைப்போல நமதுசிறார்கள் ஆங்கிலத்தையும் ஒருமுக்கியபாடமாகக் கற்கவேண்டும்; ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற்றால்தான் அவர்கள் வெளிநாடுகளுக்குச்சென்று உயர்தரக்கல்வி பயிலமுடியும்; நமதுசிறார்கள் ஆங்கிலத்தைப் புறக்கணிப்பார்களானால் அவர்களின்எதிர்காலம் பெரிதும்பாதிக்கப் பட்டுவிடும்" என்று நீதியரசர் டக்றர் எச். டபிள்யு. தம்பையா அவர்கள் கூறியிருக்கின்றார்.

## சீமெந்துத் தட்டுப்பாடு

நாட்டிலே இப்பொழுது ஏற்பட்டுள்ள சீமெந்துத் தட்டுப்பாட்டிற்குக் காரணம, காங்கேசன்துறை,காலி ஆகிய இடங்களிலுள்ள சீமெந்துத்தொழிற்சாலைகள் நாட்டிற்குவேண்டிய சீமெந்துத்தேவையை பூர்த்திசெய்யக் கூடியவை அல்லவென்று கண்டறியப் பட்டிருப்பதே. சீமெந்து உற்பத்திக்கு அவசியம் தேவைப்படும் களிமண் போதிய அளவில் கிடையாமையால் அதனை ஆஸ்திரேலியாவிலிருந்து இறக்குமதிசெய்ய முடிவாகியிருக்கிறது.

## ஆறும்வகுப்புப் பரீட்சை

இந்தப்பங்குனிமாதக் கடைசியிலே ஆறும்வகுப்பு முதலாவது தவணைப் பரீட்சையைக் கல்விப்பகுதி நடத்தவிருப்பதாகவும், மறுபரீட்சைகளைப் போல இதுவும் அந்தரங்கமுறையில் நடக்கவிருப்பதாகவும் கோப்பாய்வட்டார வித்தியாதரிசி அறிவித்திருக்கின்றார். அதனால் ஆறும்வகுப்பு மாணவர்களின் திரட்சிக்குறிப்புகள் நிரப்பப்பட வேண்டுமென்றும் அவர் தெரிவித்திருக்கின்றாராம்.

## கரடியைக் கொன்ற விவசாயி

கிளிநொச்சியைச்சேர்ந்த அம்பேகமஎனும் கிராமத்திலே சென்ற22ஆம் திகதி ஏ. எல். டேவிட்என்ற விவசாயி தனதுவயலைக் காவல்பண்ணச்சென்று யானைகளை விரட்டுதற்காகத் தீமூட்டினார். அப்பொழுது காட்டிற்குள்ளிருந்துவந்தகரடிஒன்று அவரைதாக்கியது. அவரும்விடாது கரடியைத்தாக்கி அதைக்கட்டிப்பிடித்துப் புரண்டு சண்டைபோட்டுக் கடைசியாக அதனைக்கொன்றுவிட்டார். கரடி பிறாண்டிய காயங்களுக்குக் கிளிநொச்சிஆஸ்பத்திரியில் இருந்து அவர்சிகிச்சைபெற்றுவருகிறார்.

## பிரதமரின் விஜயம்

இம்மாதம் 10ஆம்திகதியளவில் பிரதமர் டட்லி சேனநாயக்கா அவர்கள் யாழ்ப்பாண மாவட்டத்திலே மூன்று நாள் விவசாயசம்பந்தமான சுற்றுப் பிரயாணம் செய்யவிருக்கின்றார். இந்தச்சுற்றுப் பிரயாணத்திலே இங்குள்ள விவசாயப்பாடசாலை, இளைஞர் மகளிர் குடியேற்றதிட்டம், விவசாயத் தோட்டங்கள் ஆகியவைகளையும், வவனிக்குளம், தென்னியக்குளம், முறிகண்டிக்குளம், அம்பலப்பெருமாள்குளமாகிய குடியேற்றத் திட்டங்களையும் பார்வையிடுவாரெனத் தெரிய வருகிறது. ஆயினும் பிரதமரின்விஜயம் இன்னும் நம்பிக்கையானதல்லவாம்.

## கடத்தப்படும் அரிசிமூடை

இம்மாதம் 18ஆம்திகதிமுதல் 28ஆம் திகதிவரையுள்ள ஐந்துதினங்களிலும் யாழ்ப்பாணத்திலிருந்து ஆனையிறவூடாக லொறிகள்மூலம் 1,685மூடை அரிசியும், 18மூடைநெல்லும் கொழும்புக்குக் கொண்டுபோகப் பட்டிருப்பதாய்க் கண்டறியப்பட்டுள்ளது. யாழ்ப்பாண மாவட்டத்தில் ஒருமூடைஅரிசி 95ரூபாவாக விலைப்பட்டபோது சில வியாபாரிகள் இங்குவந்து அரிசிவாங்கிக் கொழும்புக்குக் கொண்டுசென்று 105ரூபாவாகவிற்று அதிகஇலாபம் அடைந்தார்கள். இப்பொழுது அதிகமானஅரிசி கொழும்புக்கு ஏற்றப்படுவதால் அங்கு ஒருமூடைஅரிசி 95 ரூபாவாக விலைகுறைந்திருக்க, இங்கே அரிசித்தட்டுப்பாடு ஏற்பட்டு ஒரு மூடைஅரிசி 120ரூபாவரை உயர்ந்திருப்பதாகத் தெரியவருகிறது. அதனால் கொழும்புக்கு அரிசி ஏற்றுமதிசெய்வதைக் கட்டுப்படுத்தச் சங்கப்பகுதி புதியநடவடிக்கைஒன்றை எடுக்கவிருக்கின்றதாம்.

## ஹரிசன குடியேற்றம்

அக்கராயன்குளத்தில் நவமாக ஆரம்பிக்கப்படவிருக்கும் குடியேற்ற திட்டத்தில் 1,500ஹரிசனர்களுக்குக் குடியேற்றவசதி அளிக்கப்படவிருக்கிறது. இத்திட்டத்தின்கீழ் 3,500 ஏக்கர்காணியில் அவர்கள் குடியேற்றப் படுவார்கள்.

## யாழ்ப்பாண வெங்காயம்

யாழ்ப்பாணத்துச் சின்ன வெங்காயத்துக்குக் கொழும்பிலே அதிக தேவை ஏற்பட்டிருக்கிறது. இந்தியாவிலிருந்து இறக்குமதிசெய்யப்படும் பம்பாய் வெங்காயத்துக்கு இன்னமும் 'ரெண்டர்'கள் கோரப்படாமையே இதற்குக் காரணமாகும். இப்பொழுது யாழ்ப்பாணத்திலிருந்து பெருந்தொகையான ஈரவெங்காயம் றெயில்மூலம் அனுப்பப்படுகிறது.

---

● பிரித்தானியிலே வெள்ளைக் குருமார் மிஷன்விருத்தியாளர் நிலையத்தின் சிரேஷ்டரான வண. யோசெவ் பிறூன்கின் சுவாமியார் மிஷன்களுக்கென சிறிய "மினிமோக்" கார் ஒன்று வாங்கியிருக்கின்றார். இந்தக் காரை வாங்க அங்கே பெர்மிங்காம், லிவர்ப்பூல், பிளாய்க்பூல் நகர்களில் வசிக்கும் மக்கள் 1,90,000 சிகறெற் கூப்பன்களைக் கொடுத்துதவினார்கள்.

● லண்டன் நகரிலே கவுட்ஸ் வங்கியின் தலைமைக் காரியாலயததில் அரசகுடும்பத்தினரின் தனிப்பட்ட வங்கிக் கணக்குகளைக்கொண்ட கணக்குப்புத்தகத்துக்குப் பலவருடகாலம் பொறுப்பாயிருந்து சமீபத்தில் இளைப்பாறிய திரு. டொனல்ட் லைனம் என்ற கத்தோலிக்க பிரமுகருக்கு மகாராணியார் ரோயல் விக்ரோறியன் வரிசைக்குரிய எம். வி. ஓ. என்ற மகிமைப்பட்டம் சன்மானித்திருக்கின்றார்.

மின்சாரத்தில் இயங்கும்

சென்றிக்

நீர் இறைக்கும் இயந்திரங்களையும்

மண்ணெண்ணெயினல் இயங்கும்

சென்றிக்

யூனியர்—சீனியர்

பாரம் குறைந்த

நீர் இறைக்கும் இயந்திரங்களையும்

எமது பலதரப்பட்ட நீர் இறைக்கும் இயந்திரங்களுடன் அறிமுகப்படுத்துகிறோம்



ஓட்டோஸ் லிமிட்டெட்

யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 20இலக்க 5ஆம் குறுக்குத்தெருவில் வதியும் திரு. நீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1968ஆம்ஸூ பங்குனிமீ 2-ந்தேதி சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org